Registered as a Newspaper பக்கங்கள் 16 விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 340

புதன்கிழமை 01 நவம்பர் 2023

ஐப்பசி 15 ஆம் நாள் – வள்ளு



புத்தாண்டுப் பரிசாக

## எகிறுகிறது வரிச்சுமை!

**கொழும்பு, நவம்பர் 1**

**2024ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பெறுமதி சேர் வரியை (வற்வரி) 18 வீதம் வரை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.** »15



## மக்களை வதைக்க அரசாங்கம் திட்டம்!

வரி அதிகரிப்புக்கு எதிராக
சஜித் பிரேமதாஸ கொதிப்பு

கொழும்பு, நவ. 1
பெறுமதிசேர் வரியை (வற்வரி) 18 சதவீதமாக அதிகரிப்பது வரிச் சூத்திரத்தைக் குழப்பியடிக்கும் செயல் என்பதுடன், இந்தப் பிற்போக்கான வரி அதிகரிப்பானது மக்கள்மீது மேலும் சுமையைத் திணிக்கும் செயலாகும் என்று எதிர்க்கட்சித் »15

## உணவுக்குப் பஞ்சம்; நாட்டில் உருவாகாது

அமைச்சர் ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 1
நாட்டில் எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்று எவரும் அச்சம்கொள்ள »15

## இன்றுமுதல் அஸ்வெசும கொடுப்பனவு

கொழும்பு, நவ. 1
பதின்மூன்று இலட்சத்து அறு »15

புலிகளை விமர்சித்த

## பெண் சட்டத்தரணிக்கு எதிர்ப்பு கைவிடப்பட்டது கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 1
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையின் ஏற்பாட்டில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை »15

## பெற்றோல் ரூ.9 குறைப்பு

கொழும்பு, நவ. 1
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால், எரிபொருள் »15

## ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு சம்பந்தனைச் சந்தித்துப் பேச்சு!

கொழும்பு, நவ. 1
ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தூதுக்குழுவினர் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகிற தமிழ் மக்களின் பிரச்சினைகள், நில அபகரிப்புகள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் »15

சண்டிலிப்பாயில்

## அடாத்தாகக் குடியிருக்கும் சு.க.வை வெளியேற்றுக!

வீட்டின் உரிமையாளரால்
பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 1
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சண்டிலிப்பாய் மக்கள் தொடர்பாடல் அலுவலகம் எனும் »15


## சமுர்த்தி அலுவலரிடம் பணம், நகை அபேஸ்!

யாழ்ப்பாணம், நவ. 1
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ஐந்தேகால் பவுண் நகைகள் மற்றும் பெரும்தொகைப் பணம், அலைபேசி என்பன அபகரிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. »15

## தனியார் செயலிச் சாரதி மீது ஓட்டோ சாரதிகள் தாக்குதல்!

யாழ். நகரில் வெறிச்செயல்
பொலிஸாரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 1
யாழ்ப்பாணத்தில் தனியார் செயலி ஒன்றின் ஊடாகத் தனக்குக் கிடைக்கப்பெற்ற »15



# அரச மருத்துவமனைகளில் நோயாளர் உரிமையைப் பேணுக

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ.1**

**அரச மருத்துவமனைகளில் கட்டாயமாக நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். மருத்துவமனைகளை நாடும் நோயாளர்களுக்கு ஆதரவுடன் சிகிச்சையளிக்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் இடம்பெற்ற இலவச கண்புரை சத்திரசிகிச்சை நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

முன்னரைவிட தற்போது இங்கு சுகாதாரம் சிறந்தமுறையில் பேணப்படுகிறது. அரச மருத்துவமனையென உணராதவகையில் சுகாதாரம் பேணப்பட்டு தனியார் மருத்துவமனைபோன்று காணப்படுகிறது. ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும் பொருளாதார ரீதியான வளர்ச்சிக்கும் ஆரோக்கியமான தனிநபர்களை உள்ளடக்கிய சமூகக் கட்டமைப்புகள் அவசியமானவை. அதற்கு மருத்துவமனைகள் பங்காற்றவேண்டும். நோயாளர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையில் தவறுகள், அலட்சியங்கள் களையப்படவேண்டும்-என்றார். (ச-125, 27)



# தடம்புரண்டது பஸ்; நடத்துநருக்குக் காயம்

யாழ்ப்பாணம், நவ.1

பருத்தித்துறை - கொடிகாமம் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பயணிகள் பஸ் ஒன்று நேற்றுத் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் நடத்துநர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கறுக்காய் - வரணிப் பகுதியில் இருந்து பருத்தித்துறை பஸ் நிலையத்தை நோக்கிப் பயணித்தபோதே இந்த விபத்து நடந்துள்ளது. விபத்துக்குக் காரணம் சாரதியின் தூக்கக் கலக்கம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியூடாகப் பயணித்தவர்களால் பஸ்ஸில் சிக்கிய பயணிகள் மீட்கப்பட்டுள்ளனர். விபத்தால் சில பயணிகளுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. (எ-26,100)

# தொல்லியல் ஆக்கிரமிப்பு இணையவழி கருத்துரை

கொழும்பு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் 'வடக்கு - கிழக்கில் தொல்லியல் நிலஆக்கிரமிப்பும் தொல்லியல் அரசியலும்' எனும் தலைப்பில் நடத்தும் உரைகளும் கலந்துரையாடலும் நாளை வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இணையவழியில் நடைபெறவுள்ளன. நிகழ்வில் சமூகச் செயற்பாட்டாளர் திருநாவுக்கரசு கோபகன் பிரதான உரையாற்றுவார்.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஷிரீன் ஷரூர் கருத்துரை நிகழ்த்துவார். உரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். இணையவழி நிகழ்வில் ZOOM ID: 77528 74214. PASS CODE: 854125 என்னும் இணைப்பையும் கடவுச் சொல்லையும் பயன்படுத்தி இணைந்துகொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-66)

# காலம் தாழ்த்தி விதைப்பதால் நோய்ப் பீடைகள் தாக்கலாம்!

## மன். விவசாய உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், நவ. 1

மன்னாரில் இந்தமுறை மேற்கொள்ளப்படும் காலபோகச் செய்கை காலம் தாழ்த்தி மேற்கொள்ளப்படவுள்ள நிலையில், பயிர்களை நோய்ப்பீடை மற்றும் பனிப்பூச்சிகள் தாக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படலாம் என்று முருங்கன் விவசாய ஆராய்ச்சி உதவிப் பணிப்பாளர் ஸ்ரீ ராஜேஸ் கண்ணா தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதான குளமாக விளங்கும் கட்டுக்கரைக் குளத்தின் கீழான பெரும்போகப் பயிர்ச்செய்கை குழுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதில் இம்முறை நீர் கிடைக்காமையால் பயிர்ச்செய்கையை காலம் தாழ்த்தி மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்போது கருத்துத் தெரிவித்த முருங்கன் விவசாய ஆராய்ச்சி உதவிப் பணிப்பாளர்,

பயிர்ச்செய்கை காலஅட்டவணைகள் பின்தள்ளப்பட்டுள்ளதால் பயிர்களில் நோய்ப்பீடை மற்றும் பனிப்பூச்சிகளின் தாக்கம் என்பன ஏற்பட வாய்ப்புண்டு. பெரும்பாலும் ஜனவரி மாதமளவில் இந்த நோய்கள் தாக்கலாம்.

எனவே நோய்த் தாக்கங்களில் பயிர்களைக் காக்க விவசாயிகள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். பயிர்செய்கையில் பிரச்சினை ஏற்படும்போது 0778888194 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்தி ஆலோசனைகளைப் பெறலாம்-என்றார். (ச-60)



# மின்மோட்டர்களைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.1

வடமராட்சிப் பகுதியில் தொடர் திருட்டுகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நெல்லியடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 4 தண்ணீர் மின்பம்பிகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சிப் பகுதியில் பல இடங்களில் உள்ள வீடுகளில் இருந்து தண்ணீர் மின்பம்பிகள் தொடர்ச்சியாகத் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பாகப் பொலிஸ் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், துன்னாலையைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26-100)

# வெள்ளை ஈ தாக்கம் யாழில் கட்டுப்பாடு!

## தென்னை அபிவிருத்திச் சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்.மாவட்டத்தில் தென்னைகளில் ஏற்பட்ட வெள்ளை ஈ தாக்கம் தற்போது முழுமையாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்று தென்னை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

கடும் வறட்சி மற்றும் வெப்பம் போன்ற காலநிலை மாற்றங்களால் இந்தத் தாக்கம் தென்னைகளில் ஏற்பட்டது. அதனால் தெங்கு உற்பத்தி குறைவடைந்து காணப்பட்டதுடன் தென்னைகளும் பாதிப்புக்குள்ளாகின.

பாதிக்கப்பட்ட தென்னை மரங்களின் தென்னோலைகளை நீர் விசிறி கழுவல் மற்றும் மருந்து விசிறல் ஆகியவற்றின் மூலம் இந்த நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்த தென்னை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்தது.

இந்தநிலையில் தற்போது மழைகாலம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து இந்த நோய்த்தாக்கம் முழுமையாகக் கட்டுக்குள் வந்துள்ளது என்று தென்னை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது. (ச-57)

# உடைமையில் போதைப்பொருள் நால்வர் கைது

யாழ்ப்பாணம், நவ.1

ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டு, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், கொட்டடி சந்தைக்கு முன்பாக உள்ள பழைய கட்டடம் ஒன்றில் போதைப்பொருள் பாவனை இடம்பெறுகின்றது என்று கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார் நால்வரைக் கைது செய்துள்ளனர். (எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதீட்டைத் தோற்கடித்து பெரமுன காலைவாராது

## அந்தக் கட்சியின் செயலாளர் சாகர தெரிவிப்பு

கொழும்பு, நவ.1

**பாதீட்டை எதிர்த்து பொருளாதாரத்தைச் சீர்குலைக்கவோ மக்களின் வாழ்க்கையை ஸ்தம்பிக்க வைக்கவோ நாம் முயற்சிக்க மாட்டோம். பாதீடு முன்வைக்கப்பட்ட பின்னரே அனைத்து விடயங்கள் தொடர்பிலும் ஆராய்ந்து மக்கள் பக்கம் நின்று முடிவு எடுப்போம் என்று பொதுஜன பெரமுனக் கட்சி அறிவித்துள்ளது.**

மொட்டுக்கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அந்தக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமக்கு முதுகெலும்பு இல்லாமல் இல்லை. முதுகெலும்பை மாத்திரம் அல்ல மக்களையும், நாட்டின் எதிர்காலத்தையும் கருத்தான் நாங்கள் முடிவுகளை எடுத்துவருகின்றோம். போரை முடிக்க முற்படுகையில் ஜே.வி.பி. எதிரணிக்குச் சென்று பாதீட்டைத் தோற்கடிக்க முற்பட்டது. இவ்வாறு காலைவாரும் வகையிலேயே எதிரணிகள் செயற்பட்டன. போர்க்காலத்தில் அதனை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆதரவு வழங்காத தலைவர் தான் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. நல்லாட்சிக் காலத்தில் மத்திய வங்கி கொள்ளை நடக்கும்போது அதனைப் பார்த்துக்கொண்டிருந்தவர். இதனை வெளிப்படையாகச்சொல்வதற்கு நாம் அஞ்சப்போவதில்லை.

அதிக தியாகங்களைச் செய்த அரசியல் கட்சிதான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே. எனவே, எடுத்த எடுப்பிலேயே பாதீட்டை எதிர்த்து பொருளாதாரத்தைச் சீர்குலைக்க நாம் முனையோம். ஒரு அரசியல் கட்சியாக நாம் இவ்வாறு செயற்படமாட்டோம் - என்றார். (ச-44)

# வாழ்க்கைச் சுமை உயர்வு மக்கள் வீதிக்கு இறங்குவர்

## எதிர்க்கட்சி எச்சரிக்கை

கொழும்பு, நவ. 1

மக்கள் மீது மென்மேலும் சுமைகளைத் திணிக்கும் வகையில் அரசு செயற்படுகிறது. இந்தநிலை தொடருமாயின் மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்குவதைத் தடுக்கமுடியாமற்போகும். அழுத்தங்களுக்குள்ளாகும் மக்களுக்கு பாதீட்டில் தீர்வை முன்வைக்க வேண்டும் - இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதுதொடர்பில் மேலும் கூறியதாவது:-

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பால் மக்கள் கடும் அழுத்தத்தில் உள்ளனர். இந்த அழுத்தத்தைக் குறைப்பதற்குப் பதிலாக மக்கள்மீது மென்மேலும் சுமைகள் திணிக்கப்படுகின்றது. மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் விலை அதிகரிக்கப்படவுள்ளது. இந்தநிலை தொடர்ந்தால் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடும் நிலைக்கு மீண்டும் தள்ளப்படுவர்.

நாடகமாடி நாட்டு மக்களை ஏமாற்றுவதைவிடுத்து அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் பாதீடு முன்வைக்கப்பட வேண்டும் - என்றார். (ச-44)

# சனி, ஞாயிறில் மின்சாரம் தடை

யாழ்ப்பாணம், நவ.1

உயர்அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் வேலைகளுக்காக மின்சாரம் தடைப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.மாவட்டத்தில் கார்கில்ஸ் மானிப்பாய், கொமர்ஷல் வங்கி மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவிலடி மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை, மானிப்பாய் சந்தை, மேதர், மணியந்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, நெபாட் வலைத் தொழிற்சாலை, உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் குருநகர், கட்டடத் திணைக்களம் கடற்கரை வீதி, ஏ.வி.வீதி, கொழும்புத்துறை, கடற்கரை வீதி, பழைய பூங்கா வீதி, கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி, சுவாமியார் சந்தி, டேவிட் வீதி, கடற்கரை வீதி குருநகர், மணியந்தோட்டம், பாசையூர், உதயபுரம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கௌதாரி முனை, வெட்டுக்காடு), விநாசியோடை, கிருஷ்ணநகர் மணவாளன்பட்டு முறிப்பு, சின்னச்சாளம்பன் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.மாவட்டத்தில் சங்குவேலி, உடுவில், உடுவில் மகளிர் கல்லூரி, பிரிட்டிஷ் கவுன்ஸில், தியாகி அறக்கொடை நிலையம், கைலாச பிள்ளையார் கோவில், நாவலர் வீதி, இராசாவின்தோட்டம், றக்கா வீதி, கோயில் வீதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சிமாவட்டத்தில்சிவகுருஅரிசிஆலை, சிவன் அருட்செல்வம் அரிசி ஆலை, கிங்ஸ் விடுதி, கிராஞ்சி, சிவபுரம், கிராஞ்சி நீர்ப்பாசன சபை, பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கசிப்புடன் இளம்பெண் கைது

யாழ்ப்பாணம், நவ. 1

கசிப்புடன் இளம்பெண்ணை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கசிப்பு விற்பனை இடம்பெறுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய கோப்பாய் மத்திக்கு விரைந்த அவர்கள், வீடொன்றை முற்றுகையிட்டுச் சோதனையை முன்னெடுத்தனர்.

வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 லீற்றர் கசிப்பைக் ஃகைப்பற்றியதுடன் அதை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 வயதான இளம் பெண்ணையும் கைது செய்தனர். (ஒ-125)

# புதினம் தெரியுமோ?

**யாழ்ப்பாண ரவுனுக்குள்ள நீங்கள் ஏதும் அலுவலா சைக்கிளிலையோ இல்லாட்டி மோட்ட சைக்கிளிலையோ வந்தால், என்ன செய்வீங்கள்? அந்த வாகனத்தை ஏதும் கடைக்கு முன்னாலையோ இல்லாட்டி றோட்டுக்கு நடுவில வாகனம் விடுறதுக்கு இருக்கிற இடத்திலையோ விட்டிட்டுப்போய், உங்கட அலுவல் முடிஞ்ச பிறகு அதை எடுப்பீங்கள். இன்னுமொரு அலுவலுக்கு கொஞ்சம் தள்ளிப் போகவேணுமெண்டால் அதுமட்டும் வாகனத்தில போய், இன்னொரு இடத்தில அதை 'பார்க்' பண்ணிப் போட்டுப் போவீங்கள். ஆனால் இப்ப அப்பிடியெல்லாம் செய்ய ஏலாது.**

**இப்பவெல்லாம் நீங்கள் போய் சைக்கிளையோ, மோட்டர் சைக்கிளையோ இப்பிடி நீங்கள் றோட்டிலையோ, கடைக்கு முன்னாலையோ பார்க் பண்ணிட்டு திரும்பமுதலே, படங்களில வாற ஆவியள் மாதிரி சடாரெண்டு ஒராள் கையில ரிக்கெற்றை கிழிச்சுக்கொண்டு நிக்கும். நீங்கள் ஒண்டும் விளங்காமல் தலையைச் சொறிவியள். 'அண்ணை, இதில பார்க் பண்ணினால் 30 ரூபா தரவேணும். இந்தாங்கோ ரிக்கெற்' எண்டு ரிக்கெற்றை நீட்டிப்போட்டு காசு கேப்பினம். நீங்கள் குடுக்கமாட்டன் எண்டால், பிறகு அவையின்ர வாயில ஊருலகத்தில இல்லாத சொல்லெல்லாம் வரும். அந்தப் பயத்திலையே கனபேர் காசைக் குடுத்திட்டு போடுவினம். அப்பிடியான அர்ச்சினையளுக்கும் அசையாத ஆக்கள் இருக்கினம். அவையிட்ட தங்கட வேலை எடுபடாது எண்டு தெரிஞ்சால் 'வரேக்க தாங்கோ' எண்டு அந்த இடத்தை விட்டு ரிக்கெற்காரர் போவினம். நீங்களும் உங்கட வீரத்தை மெச்சினபடி திரும்பி வந்து பார்த்தால், உங்கட வாகனத்தின்ர ஏதும் ஒரு பார்ட்ஸ் உடைஞ்சு கிடக்கும் இல்லாட்டி காணாமல் போயிருக்கும். சிலவேளை ரிக்கெற் வாங்கினாலும் கூட, அவையின்ர வாகனங்களின்ர பார்ட்ஸ்"களும் காணாமல் போயிருக்கு. சிலவேளை வாகனங்கள் கூட காணாமல் களவு போயிருக்கு. 'உங்களிட்ட தானே ரிக்கெற் எடுத்தம். எங்கட வாகனத்துக்கு என்ன பதில்?' எண்டு கேட்டால், அவை அந்த ரிக்கெற்றை உங்களிட்டையே காட்டி, 'இதில வாகனப் பாதுகாப்பு எண்டு போடேலையே, நிலவாடகை எண்டுதானே போட்டிருக்கு' எண்டு தர்க்கம் கதைச்சிட்டு தங்கட சோலியைப் பார்க்கப் போடுவினம்.**

**அதைவிட இப்பொரு கூத்தும் இருக்கு. ஒரு கடையில சாமான் வாங்கிறதுக்காக வாகனத்தை றோட்டில விட்டிட்டு ரிக்கெற் எடுத்திட்டு இன்னொரு கடைக்கு கொஞ்சம் போறதுக்காக தள்ளிப்போய் வாகனத்தை நிப்பாட்டினால் அதுக்கும் இன்னொருக்கா ரிக்கெற் வாங்கோணும். முதல் எடுத்த ரிக்கெற்றை காட்டி 'அங்க எடுத்திட்டம்' எண்டால், 'பழைய ரிக்கெற்றை கொண்டந்து ஏமாத்திறியளோ?' எண்டு எதிர்வாதம் செய்வினம். எப்பிடியோ இப்ப ரவுனுக்கு ஒரு அலுவலுக்கு வாறதெண்டால் இப்பிடி வாகனம் விட 'நிலவாடகைக்கு' மட்டும் புறிம்பா கொஞ்சம் காசையும் சேர்த்து எடுத்திட்டு வாங்கோ. இல்லாட்டி பார்ட்ஸ் இல்லாத வாகனத்தோடதான் வீட்ட போகவேணும். இப்பிடியெல்லாம் அலப்பறை குடுக்கிற உந்த ரிக்கெற் கும்பலிட்ட இருந்து யார்தான் சனத்தைக் காப்பாத்துவினம்?**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நியூஸிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இன்றைய (01.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

தினம் ஒரு பரிசு 28

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

மெகா பரிசு

விடை : ..........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.




# அரையிறுதிக் கனவை தக்கவைத்தது பாக்.!




**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில், பங்களாதேஷை வீழ்த்தி அரையிறுதிக் கனவைத் தக்கவைத்தது பாகிஸ்தான்.**

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணியை ஆட்டிப் படைத்தார் ஷகீன் ஷா அப்ரிடி. ரன்சிட் ஹசன் ஓட்டமெதையும் பெறாமலும், சான்ரோ 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க பாகிஸ்தான் ஆட்டத்தில் மூன்றாவது ஓவரிலேயே ஆதிக்கம் செலுத்தியது. முஸ்டபிஸுர் ரஹிம் 5 ஓட்டங்களுடன் ஏமாற்றினாலும், லித்தன் டாஸ், மகமதுல்லா இருவரும் இணைந்து பங்களாதேஷின் பயணப்பாதையை மாற்றியமைத்தனர். பிறிதொரு விக்கெட்டை இழக்காமல் 100 ஓட்டங்களைக் கடந்தது பங்களாதேஷ். 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லித்தன் டாஸ். அணித்தலைவர் சகிப் அல் ஹசனும் பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 56 ஓட்டங்களுடன் மகமதுல்லாவும், 43 ஓட்டங்களுடன் சகிப் அல் ஹசனும் ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணி 204 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

பந்துவீச்சில் ஷகீன் ஷா அப்ரிடி, மொகமட் வசீம் இருவரும் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு அந்த அணியின் ஆரம்ப வீரர்களான அப்துல்லா சபிக், பகர் ஷமன் இருவரும் இணைந்து வெற்றிக்கான அடித்தளத்தை பலமாக அமைத்துக் கொடுத்தனர். இருவரும் அரைச்சதம் கடந்து இணைப்பாட்டமாக 128 ஓட்டங்களைப் பகிர்ந்த பின்னரே 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அப்துல்லா ஷபீக். பாபர் 9 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த பகர் சமான் 81 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் பதற்றம் ஏதுமின்றி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் ரிஸ்வான். (ம)

# நவம்பர் 5ஆம் திகதி 70,000 கோலிகள்!



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் கோலியின் 35ஆவது பிறந்தநாளை வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கு பெங்கால் கிரிக்கெட் சபை பெருமெடுப்பில் தயாராகி வருகின்றது.

கோலி தன் 35ஆவது பிறந்தநாளை நவம்பர் மாதம் 5ஆம் திகதி கொண்டாடுகின்றார். அன்றையதினம் கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்துக்கு முன்பாக மிகப்பெரிய கேக் வெட்டும் வைபவத்தை ஏற்பாடு செய்துள்ளது பெங்கால் கிரிக்கெட் வாரியம். அத்துடன் கோலி களமிறங்கும்போது அணிவதற்காக கோலியின் முகத்தைப் பொறித்த 70 ஆயிரம் முகமூடிகளை ரசிகர்களுக்கு வழங்கவும் பெங்கால் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது. இதற்காக ஐ.சி.சி.யின் அனுமதி பெறப்படவுள்ளது. (ம)

## தினம் ஒரு பரிசு நாள் 26இன் வெற்றியாளர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செ.பகவதி | - | சுழிபுரம் | ஜெ.காந்தறூபன் | - | குருநகர் |
| தி.மதுராகரன் | - | சித்தன்கேணி | செ.செல்வராசா | - | காரைநகர் |
| ஆர்.பிரியங்கராஜ் | - | கோண்டாவில் | க.தேனுஸா | - | வலந்தலை |
| தே.யசோதரன் | - | உடையார்கட்டு | இ.இந்ரஜித் | - | கள்ளப்பாடு |
| சி.அபிஷா | - | கோப்பாய் | மே.ஆதிரன் | - | இல்வாரை |
| [illegible] | - | [illegible]ணம் | ச.துவாரகன் | - | ஆனைக்கோட்டை |
| சா.ஆரணி | - | வவுனியா | ஜி.அனிஸ் | - | சுன்னாகம் |
| சி.குகதாஸ் | - | வவுனியா | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திருந்தாத அதிகாரம்

மீண்டும் நாட்டில் மக்கள் போராட்டங்கள் ஆங்காங்கே தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத மக்கள் மெல்லமெல்ல மீண்டும் வீதிகளில் இறங்க ஆரம்பித்திருக்கின்றனர். கோத்தாபயவின் ஆட்சியில், அவரது அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானங்களால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்ததை அடுத்து, இலங்கையின் வரலாற்றில் இதுவரை இல்லாதவாறு மக்கள் போராட்டம் வெடித்தது. ஆனால், அந்தப் போராட்டம் கோத்தாபயவை ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றினாலும், மக்கள் எதிர்பார்த்த முழுமையான மாற்றத்தை 'சிஸ்டம் சேஞ்சை' ஏற்படுத்தவில்லை.

நாட்டின் ஜனாதிபதியாக ரணில் பதவியேற்ற பின்னர் தற்காலிக ஏற்பாடுகளால் நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் மறைக்கப்பட்டன. சர்வதேச நாணயநிதியத்திடம் பெறப்பட்ட கடனுதவி மூலம் சில மாற்றங்கள் ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்டன. ஆனால், நாட்டின் பொருளாதாரத்தை நிலையாகக் கட்டியெழுப்பும் எந்த முயற்சியும் தற்போதைய ஆட்சியாளர்களால் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. நாட்டின் வருமானத்தை அதிகரிக்கும் வழிகளைத் தேடாமல், கடன்களைக் கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்கும் நடவடிக்கைகளே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தால் இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் இந்த நகர்வு நாட்டு மக்கள் மீதான சுமையை அதிகரிக்குமே தவிர ஒருபோதும் குறைத்துவிடாது. உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து அவற்றை ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசாங்கத்துக்கு அறவேயில்லை. எந்த நாட்டிடம், எந்த அமைப்பிடம் கடன் வாங்கிக் காலத்தை ஓட்டலாம் என்ற 'ஊதாரி அரசாங்கமே' தற்போது ஆட்சியில் இருக்கிறது. எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பதைப்போல, இப்போதைய நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி, தமது அரசியல் இருப்பை பலப்படுத்தவே ரணில் உள்ளிட்ட அரச தலைவர்கள் முயற்சிக்கிறார்களே தவிர, மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்கும் உபாயங்கள் எதனையும் அவர்கள் தேடுவதாக இல்லை.

தற்போது மீண்டும் துளிர்விடத் தொடங்கியுள்ள போராட்டங்களுக்குக் காரணமும் இதுவே. அரச ஊழியர்கள் சம்பள உயர்வுகோரி போராட்டங்களை ஆரம்பித்திருக்கும் நிலையில், பொதுமக்கள் மின்கட்டண உயர்வுக்கு எதிராகவும், ஏனைய விலையேற்றங்களுக்கு எதிராகவும் வீதிகளில் இறங்க ஆரம்பித்திருக்கின்றனர். இந்தப் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார். ஆனாலும் நேரடியாகச் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளாமல், வாழ்க்கைச்செலவுப் படியிலேயே 10 ஆயிரம் ரூபாவை அதிகரிக்கப்போவதாக அரசதரப்புச் சொல்கிறது. இப்படி வாழ்க்கைச் செலவுப்படியாக வழங்கும் தொகையை எப்போது வேண்டுமானாலும் அரசாங்கம் விலக்கிக் கொள்ளவும் முடியும். குறிப்பாக தேர்தல்வரை இந்த வாழ்க்கைச் செலவுப்படியை வழங்கி, வாக்குகளை அள்ளிவிட்டு, பின்னர் எட்டி உதைக்கலாம் என்று ரணில் அரசாங்கம் கணக்குப் போட்டிருக்கலாம் அல்லது போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்யும் உடனடி முயற்சியாக அரசாங்கம் இந்த அறிவிப்பை விடுத்திருக்கலாம்.

இலங்கைக்குக் கடனுதவி வழங்கும் சர்வதேச நாணய நிதியம், நாட்டின் வருமானத்தைக் கூட்டுவதற்கான எந்த முயற்சியும் இன்றி, அரசாங்கம் சம்பள அதிகரிப்பை வழங்குவதையோ, மானியங்கள் வழங்குவதையோ ஏற்றுக்கொள்வது கடினம். வரி வருமானத்தை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கும் அரசாங்கம், வருமானத்தை அதிகரிப்பதற்குப் புதிய வரிகளை விதிக்கவேண்டிய நிலைமையே ஏற்படும். இப்படியொருநிலை ஏற்பட்டால், நாட்டில் சம்பள அதிகரிப்போ, மானியங்களோ அதனைத் தணிக்க ஒருபோதும் உதவப்போவதில்லை. இவ்வாறான அறிவிப்புகள் மூலம் போராட்டங்களை இப்போதைக்குத் தணித்தாலும், மீண்டும் மீண்டும் இந்த நெருக்கடிகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கப்போகின்றன.

அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஆட்சியாளர்கள் தகிடுதத்தங்களைச் செய்யாமல், நாட்டின் உண்மையான பிரச்சினையை இனங்கண்டு தீர்க்க முயன்றால் மட்டுமே நெருக்கடியில் இருந்து மீள முடியும். அரசியல் இலாபங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களைச் செயற்படுத்த ஆட்சியாளர்கள் முயலவேண்டும். ஆனால், அதிகாரத்துக்காக எந்த எல்லைக்கும் செல்லக்கூடிய அரசியல்வாதிகளைக் கொண்ட இந்த நாட்டில் அது நடக்குமா என்பது கேள்விக் குறியே.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

மரங்களை நடுவதற்கான மிகச் சிறந்த காலம் இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்.

சீனப்பழமொழி







# தற்காலிக ஏற்பாடுகளாலேயே நெருக்கடியில் சிக்கியது நாடு!

## விமல் வீரவன்ஸவுக்கு வந்த ஞானம்

**கொழும்பு, நவ.1**

**நாமல் ராஜபக்ச உள்ளிட்ட மொட்டுக் கட்சியினர் கர்மவினையை அனுபவிக்கின்றனர். கூட்டணிக் கலாசாரம் பற்றி தற்போது கதைக்கும் அவர்கள் கோத்தாபய ராஜபக்ச ஆட்சியில் அதை மறந்தே செயற்பட்டனர் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**



இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

கூட்டணியாகச் செயற்படும்போது பங்காளிக்கட்சிகளினது ஆலோசனையைப் பெற்று, அதற்கமைய செயற்படுமாறு ஜனாதிபதிக்கு நாமல் ராஜபக்ச அறிவுரை வழங்கியுள்ளார். ஆனால், கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் கூட்டணி அரசியல் கலாசாரம் பற்றி அவர்களுக்குத் தெரிந்திருந்தால் அந்த ஆட்சிதான் இன்றும் நீடித்திருக்கும். நாமலின் கருத்தை கேட்கும்போது சிரிப்புத்தான் வந்தது. அதுதான் கர்மவினை. அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை எப்படியாவது ஒத்திவைத்து ஆட்சியைத் தக்கவைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார். அதற்காக சலுகை அறிவிப்புகள் வெளிவருகின்றன. இப்படியான தற்காலிக நடவடிக்கைகளால்தான் நாடு நாசமானது. புதிய அரசியல் பயணத்துக்கு மக்கள் தயாராகவேண்டும் -என்றார். (எ-44)

# சிறிலங்கா கிரிக்கெட் சபை பதவி விலகவேண்டுமாம்

கொழும்பு, நவ.1

தேசத்துரோக நடவடிக்கையில் ஈடுபடும் சிறிலங்கா கிரிக்கெட் சபை உடன் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க. இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறிலங்காகிரிக்கெட்சபை, விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதியைப் பெறாமல் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதியின்றித்தான் எல்.பி.எல். கூட நடத்தப்பட்டது.

விளையாட்டுக் கழகங்கள், தெரிவுக்குழு உள்ளிட்டவை சுயாதீனமாகச் செயற்பட நாம் இடமளித்துள்ளோம். ஆனால், சர்வதேசத்துக்குச் சென்று அரசியல் அழுத்தம் என கிரிக்கெட் சபை கூறுகின்றது. இது தேசத்துரோக நடவடிக்கையாகும். தமது ஊழல், மோசடிகளை மூடி மறைப்பதற்காகவும், தமது இருப்புக்காகவுமே கிரிக்கெட் சபை சர்வதேசத்துக்குப் பொய்யுரைக்கின்றது.

கிரிக்கெட் சபை உடனடியாகப் பதவி விலக வேண்டும். நான் ஐ.சி.சி.ஐ மதிக்கின்றேன். ஐ.சி. சி.க்கு கடிதம் எழுதியுள்ளேன். அங்கத்துவ நாடுகளுக்கும் எழுதவுள்ளேன், காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அவற்றை வெளிப்படையாகக் கூறமுடியாது - என்றார். (எ-44)

**நாளை**

**02.11.2023**

**வியாழக்கிழமை**

**ஐப்பசி 16**

சுபநேரம் : 07.34 - 09.04

ராகுகாலம் : 01.34 - 03.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்டன் குடியுரிமை விவகாரம்;

# டயானாவுக்கு எதிரான வழக்குத் தள்ளுபடி!

கொழும்பு, நவ. 1

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வலுவிழக்கச் செய்து உத்தரவிடு மாறுகோரி தாக்கல்செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்துள்ளது.

மூவரடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பெரும்பான்மையான நீதிபதிகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் குறித்த மனு தள்ளுபடி செய்யப்படுவதாக நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

டயானாகமகே, பிரித்தானியக் குடியுரிமம் பெற்றுள்ளதால், நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகவும், அமரவும், வாக்களிக்கவும் தகுதியில்லை எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி சமூக செயற்பாட்டாளரான ஓஷல கேரத்தால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)


1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 . 06 . 1952

மறைவு 12 . 11 . 2022



அமரர்

கந்தையா தவபாலசந்திரன்

(பேக்கரி ராசன் - செல்வம் பேக்கரி)

திதி : தேய்பிறை சதுர்த்தி

மண்ணுலகில் பிறந்து மண்ணுலகை வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
எம்முயிர்த் தெய்வமே!
விண்ணுலகம் சென்று இன்று ஓராண்டு ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் எம் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்காத நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சோவாங்கன்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

நினைவுடன்...
குடும்பத்தினர்.



மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 09 . 1961

இறப்பு 31 . 10 . 2023



மரியசேவியர் ஆனந்தசீலி (எமல்)

நீர்வேலி வடக்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியசேவியர் ஆனந்தசீலி அவர்கள் நேற்று (31.10.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா றோசம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியும், குருசுமுத்து ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், மரியசேவியரின் அன்பு மனைவியும், ஜென்சிலி விமல்டா (நிலா) (பிரான்ஸ்), டியென்சிலி நிறோசா ஆகியோரின் அன்புத் தாயாரும், கேதீஸ் (பிரான்ஸ்), அருள் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆர்த்தி, றிசா, அகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.11.2023) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, நீர்வேலியிலுள்ள புனித பரலோக அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித பரலோக மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

077 690 4713

தகவல்
குடும்பத்தினர்.

(CS 52684) (Ak.4)


# யாழ்ப்பாணம் காரைநகர் இ.போ.ச. சேவை இன்று!

யாழ்ப்பாணம், நவ. 1

நீண்ட இடைவெளிக்குப்பின்னர், யாழ்ப்பாணம், காரைநகர் இடையிலான, இ.போ.ச. 785/1 வழித்தடச் சேவைகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று மு.ப.10 மணிக்கு பேருந்து காரைநகரிலிருந்து பயணத்தை ஆரம்பித்து யாழ்ப்பாணம் நகரத்தை அடையும். பின்னர் பிற்பகல் 1.20 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து காரைநகரைச் சென்றடையும். மூளாய், டச்சு வீதி ஆரம்பம் முதல் சித்தன் கேணி, டச்சு வீதி இந்தப் பேருந்து வழித்தடத்தின் பிரதான நோக்கமாகும். (ம-27)

# நினைவேந்தல்

யாழ்ப்பாணம், நவ. 1

இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தலைவர் செல்லத்துரை புருஷோத்தமனின் 15ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுத்தூபிக்கு முன்பாக இன்று நண்பகல் 12.30 மணியளவில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-125)

# ஞானச்சுடர் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 1

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் 310 ஆவது ஐப்பசி மாத மலர் வெளியீட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் ஆ.சிவநாதன் மலரின் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. (ச-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை.

**மிதுனம்:** மனதில் இனம்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படலாம். அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். உற்சாகம் பிறக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**கன்னி:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும் வியாபாரத்தில் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். ஆதாயம் உண்டாகும். கருத்தொற்றுமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாகச் செல்லவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவி கேட்டுவருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரசபை ஊழியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

கொழும்பு, நவ.1

மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கான சட்டவரைவுக்கு எதிராகவும் மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் இன்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுப டவுள்ளனர் என்று இலங்கை மின் சாரசபை ஊழியர் சங்கம் அறிவித்துள் ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளதாவது:-

அனைத்து மின்சாரசபை ஊழியர்களை யும் கொழும்புக்கு வரவழைத்து நாளை (இன்று) போராட்டத்தில் குதிக்கவுள் ளோம்.

இலங்கை மின்சாரசபையானது இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும். எனினும் சட் டத்தில் இயங்குவதாக அரசாங்கம் கூறி பல வெளிநாட்டு தனியார் நிறுவனங் களுக்கு இலங்கை மின்சாரசபையை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக் கப்படுகிறது.

அத்துடன் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மக்களை அசௌகரியப்படுத் தும் வகையில், மின் கட்டணத்தை அதிக ரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக் கின்றது.

அதற்கமைய மின்கட்டண அதிகரிப்பு, இலங்கை மின்சாரசபை விற்பனை, சம் பள முரண்பாடு நீக்கப்ப டாமை போன்ற வற்றைக் கண்டித்து இலங்கை மின் சாரசபையின் தலைமை அலுவலகத் துக்கு முன்பாக போராட்டம் நடத்த திட்டமி டப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# போராட்டத்தை தொடரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்

கொழும்பு, நவ.1

இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தால் நேற்றுமுன்தினம் ஆரம்பிக் கப்பட்ட அடையாள பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளா கவும் தொடர்ந்தது.

பல கோரிக்கைகளை முன்வைத்து நாட ளாவிய ரீதியில் அடையாள பணிப் புறக் கணிப்பு முன்னெடுக்கப் பட்டு வருகின் றது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தொழிற்சங்கம் தெரிவித்தது.

எரிபொருள், ஏனைய செலவுகளின் அதி கரிப்புக் காரணமாக தற்போதைய கொடுப்பனவுகள் போதுமானவையாக இல்லை.

அரசாங்கத்தால் வழங்கப்படும் கொடுப் பனவுகளை அதிகரிக்கவேண்டும் என்று கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக் கப்படுகின்றது.

விமான நிலையங்கள், துறைமுகங்கள், மகப்பேற்று மற்றும் குழந்தைகள் மருத் துவமனைகள், சிறுநீரகப் பிரிவுகளின் செயற்பாடுகள் இந்தப் போராட்டத்தால் பாதிக்கப்படாது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொழிற்சங்கம் தெரிவித் துள்ளது. (ஏ-இ)


**வீடு வாடகைக்கு தேவை**

ஒருவருக்கு மருதனார்மடம் மற்றும் அதை அண்டிய பிரதேசத்தில் சகல வசதிகளுடன் கூடிய சிறிய வீடு / பகுதி வீடு வாடகைக்கு தேவை.

075 138 7644, 077 138 7640

**தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு**

எம்மிடம் நல்லின தென்னம் நாற்றுக்களும் குறைந்த காலத்தில் பயன்தரக் கூடிய நாற்றுகளும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 659 2044

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

சர்வதேச ஐக்கிய கலாம் நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்வு இந்தியாவில் ஜே.பி.ஹோட்டல், கோயம்பேடு, சென்னையில் 15.10.2023 அன்று நிகழ்ந்த வேளை யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**



அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க அழைக்கப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை நாமும் பாராட்டுவதோடு அவரது சமூகசேவை மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

Congratulations Congratulations

உரிமையாளரும், ஊழியர்களும்

**டொட் லைன் டிஜிற்றல் கலர்லாப்**

96, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.


## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் வாகனத்தரிப்பிடம் என்பன குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் 2024

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி :- 14.11.2023 செவ்வாய்க்கிழமை ந.ப 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 14.11.2023 செவ்வாய்க்கிழமை பி.ப 02.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி : 14.11.2023 செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணி

| இல | குத்தகைவிபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | | 53,295.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல - 06 | 1,500.00 | 57,475.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி மாட்டிறைச்சிக்கடை இல - 07 | 1,500.00 | 380,000.00 | 5,000.00 | 1,500.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி பன்றிறைச்சிக் கடை | 1,000.00 | 190,000.00 | 1,000.00 | 1,500.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | ...... | 115,140.00 | 1,000.00 | 1,500.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,750.00 | 115,525.00 | 1,000.00 | 1,500.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,750.00 | 556,320.00 | 10,000.00 | 1,500.00 |
| 08 | இறால்மடம் சந்தை கோழிக்கடை | 1,250.00 | 28,740.00 | 1,000.00 | 1,500.00 |
| 09 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 597,380.00 | 10,000.00 | 1,500.00 |
| 10 | கும்பலை சந்தைக்குள் அமைந்துள்ள மாட்டிறைச்சிக்கடை இல - 01 | 2,000.00 | 723,275.00 | 10,000.00 | 1,500.00 |
| 11 | கும்பலை சந்தைக்குள் அமைந்துள்ள கோழிக்கடை இல - 02 | 2,000.00 | 71,250.00 | 1,000.00 | 1,500.00 |
| 12 | கும்பலைச்சந்தை | ...... | 346,050.00 | 5,000.00 | 1,500.00 |
| 13 | கும்பலைச்சந்தை வாகனத்தரிப்பிடம் | | 19,000.00 | 1,000.00 | 1,500.00 |
| தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை கோழிக் கடை | 1,050.00 | 80,465.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 15,675.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | கணேஸ்வரம் சந்தை | ......... | 46,500.00 | 1,000.00 | 1,500.00 |
| 04 | கணேஸ்வரம் சந்தை கோழிக் கடை | 1,000.00 | 57,580.00 | 1,000.00 | 1,500.00 |
| 05 | கீரிமலை மரக்கறிச்சந்தை | ......... | 28,000.00 | 1,000.00 | 1,500.00 |
| 06 | வீமன்காமம் பொதுச்சந்தை | .......... | 461,130.00 | 5,000.00 | 1,500.00 |
| 07 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 564,175.00 | 5,000.00 | 1,500.00 |
| 08 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 20,900.00 | 1,000.00 | 1,500.00 |
| 09 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 15,200.00 | 1,000.00 | 1,500.00 |
| மயிலிட்டி உப அலுவலகம் | | | | | |
| 01 | குரும்பசிட்டி சந்தை | .......... | 11,704.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 181,621.00 | 1,000.00 | 1,500.00 |
| காங்கேசன்துறை உப அலுவலகம் | | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | ......... | 71,250.00 | 1,000.00 | 1,500.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,200.00 | 81,175.00 | 1,000.00 | 1,500.00 |
| 03 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல - 01 | 1,200.00 | 62,700.00 | 1,000.00 | 1,500.00 |
| 04 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல - 02 | 1,200.00 | 55,700.00 | 1,000.00 | 1,500.00 |

குறிப்பு :
- மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள 14.10.2023 திகதிய உதயன், தினக்குரல் பத்திரிகையில் பார்வையிடவும் அல்லது பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 0212241130 தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

திரு.சு.சுதர்ஜன்,
தலைவர் உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வலிகாமம் வடக்குபிரதேச சபை- காங்கேசன்துறை

01.11.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அரசாங்க அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
## நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024

மாவட்ட செயலாளர். யாழ்ப்பாணம் சார்பில் யாழ். மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக் குழுவினால் யாழ். மாவட்ட செயலகம். மற்றும் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2024ம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும். பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் வடபிராந்தியத்தி லுள்ள நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு (அறை இல: 42). மற்றும் பிரதேச செயலகங்களில் 2023-11-01 ம் திகதி தொடக்கம் 2023-11-30ம் திகதி வரை அலுவலக நேரத்தில் அல்லது www.jaffna.dist.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2023-11-30ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024"** எனக் குறிப்பிட்டு **"அரசாங்க அதிபர். பெறுகை அலகு. மாவட்டச் செயலகம். யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல:42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும். ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு ரூபா 500/= இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்டச் செயலாளர். மாவட்டச் செயலகம். யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலங்கை வங்கி கணக்கிலக்கத்திற்கு வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக் கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டையை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் 2023-11-30ம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம். |
|---|---|
| ரூபா 2,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000க்கு அதிகமானதும் ரூபா 5,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000க்கு அதிகமானதும் ரூபா 10,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 5,000 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(N.I)

**வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்**
**தீபாவளி தினம் வரை**
**இந்தியன் செலக்ஷன்**
**தீபாவளி ஜவுளிக் கொண்டாட்டம்**



பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் டொப், பாட்டி புறொக், சேட், ரீ சேட், டெனிம் ஜீன்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகளையும் இன்னும் மங்கையர் மனங்கவரும் ஆடைத் தெரிவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

**விஷேட விலைக்கழிவு**
**டொப் 500/=**
**ரெடிமேட் சல்வார் 750 /=**
**கையிருப்பு உள்ளவரை மட்டுமே**
**தீபாவளி தினம் வரை**
**இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்**
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

# கூட்டுறவு தின நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கூட்டுறவு தின நிகழ்வும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. சமாசத் தலைவர் செ.செல்வராசா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், வடக்குமாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர் திருமதி பா.அபிராமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-ரி-63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவேற்பாளர் தேவை

Hotel ஒன்றிற்கு வரவேற்பாளர் (Receptionist) தேவை.
(பெண்கள் விரும்பத்தக்கது)
(ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்).

TP : 077 256 1990
077 581 8769

(cs-32663(AK.1)



200 Serving the Community

BATTICOTTA SEMINARY 1823 - 2023 JAFFNA COLLEGE

கல்விக் கண்காட்சி

காலம் : 02, 03 . நவ. 2023
நேரம் : மு.ப. 10.00 - பி.ப. 3.00
இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரவேசக் கட்டணம் :
மாணவர்களுக்கு - ரூ.20/=
மாணவர்களைக் கூட்டி வரும் ஆசிரியர்களுக்கு - ரூ. 50/=
ஏனையோர்கட்கு - ரூ.100/=

அதிபர்






சுப்பர் மார்க்கெட் மற்றும் விற்பனை நிலையங்களில் பொருட்களை வாங்கி BOC டெபிட் (ATM) அட்டை மூலம் பணம் செலுத்துங்கள்.

- மாதாந்தம் குறைந்தது ரூ.5000/- க்கு பொருட்கள் வாங்கி வெற்றி வாய்ப்பை பெறுங்கள்.
- ஒவ்வொரு மாதமும் புதிய வெற்றியாளருக்கான வாய்ப்பு
- மாதாந்தம் 100 வெற்றியாளர்கள்.
- மேலும் சிறப்பு தள்ளுபடிகளுடன் பல நன்மைகள்.

2023 நவம்பர் 01 முதல் 2024 ஜனவரி 31 வரை மட்டுமே.

BOC CARDS
UNSTOPPABLE YOU

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

1975

WP/GT/5991




# நுண்கலைக் கூடம் பூநகரியில் திறப்பு

கிளிநொச்சி, நவ. 1

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சோபாலபிட்டியில் இலவச சரவணப் பொய்கை நுண்கலைக்கூடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

பிரதேச மாணவர்களின் நலன்கருதி பூநகரியைச் சேர்ந்த புலம்பெயர் உறவுகளால் இந்த நுண்கலைக் கூடம் அமைத்துக்கொடுக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஓய்வுப்பெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் பிரதம விருந்தினராகப் பங்கேற்று நுண்கலைக்கூடத்தைத் திறந்துவைத்தார்.

பூநகரி பிரதேச செயலர் த. அகிலன், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலமொழி கற்பித்தல் துறை விரிவுரையாளர் கலாநிதி க. ஸ்ரீகணேசன், பூநகரி மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி சி.ஆனந்தசிறி, பூநகரி பிரதேசசபை செயலாளர் இ தயாபரன் ஆகியோரும் விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

(ச-214)



தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட மட்டுவில் குடும்ப முன்பள்ளிகளின் சிறுவர்தினமும், ஆசிரியர் தினமும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

(எ-27-159)

# பயிற்சியாளர் பதவி விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரக்கோவையை எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்பதாக "பணிப்பாளர், உயர்தொழில்நுட்பவியல் நிறுவனம், இல 665/2 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவேண்டும் என்று தொழில்நுட்பவியல் நிறுவனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ச-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற நோயாளர்கள் நூற்றுக் கணக்காகக் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தனை போர்க்குற்றங்களுக்கும் மத்தியில் இஸ்ரேலுக்கு எதிராக ஒரு கண்ட னக்குரல்கூடப் பதிவாகவில்லை என்பது எத்தனை பெரும் அபத்தம்.

# புதன் பொய்கை



"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு." -வள்ளுவர்

# கருவறுக்கப்படும் காஸா!



பிரகாஷ்

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான மோதல் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தீவிரம் பெற்றிருக்கின்றது. ஐந்தாயிரம் ஏவுகணைகளை இஸ்ரேலுக்குள் அனுப்பி ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்கு மொத்தக் காஸாவையும் கருவறுத்துக் கொண்டிருக்கின்றது இஸ்ரேல். 'எந்தச் சக்தியாலும் கட்டுப்படுத்த முடியாத, எந்தவொரு எல்லைக்கும் போகவல்ல போர்' என்று காஸா மீதான நடவடிக்கையை அறிவித்திருக்கின்றார் இஸ்ரேலின் அதிபர் நெத்தன்யாகு. இஸ்ரேல் பதில் தாக்குதலைத் தொடங்கியதும் இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என்ற பேதமெல்லாம் இல்லாமற்போய்விட்டது. எங்கும் மரணம். எல்லாப் புறமும் ஓலக் குரல். விண்ணளாவிய கட்டடங்கள் நொருங்கி விழுகின்றன. மசூதிகள் இடிக்கப்படுகின்றன. வீடுகள் தரைமட்டமாகின்றன. மக்கள் நாலாபுறமும் அலறிக்கொண்டு ஓடுகிறார்கள். இங்கே ஓடுவது முஸ்லிம்கள். அங்கே ஓடுவது யூதர்கள். மற்றும்படி அச்சம் ஒன்றுதான். அவலம் ஒன்றுதான்.

பாலஸ்தீனத்து அரேபியர்களுக்கோ, இஸ்ரேலிய யூதர்களுக்கோ இது புதிதல்ல. வாழ்நாளில் அவர்கள் காணாத போரை உலகின் வேறெந்தப் பகுதி மக்களும் கண்டிருக்க முடியாது. ஒரு நாளா, ஓராண்டா, சில பத்தாண்டுகளா? இது நூற்றாண்டு காலப் போர். இந்தமுறை தொடங்கி வைத்திருப்பது ஹமாஸ் என்பது மட்டும்தான் ஒரே மாறுதல். ஹமாஸ் என்பதால்தான் அவ்வளவு ஏவுகணைகள். இந்த ஏவுகணைகளால்தான் அந்தளவுக்கு சேதாரம். அவ்வளவு சேதாரத்தால்தான் ஆக்ரோஷமான பதிலடி.

பாலஸ்தீனத்தை இஸ்ரேல் அழித்துக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், உலகமே இஸ்ரேலின் பக்கம் திரண்டு நின்று கொண்டிருப்பதை எப்படிப் புரிந்துகொள்வது? பாலஸ்தீனர்கள் பாவம் என்று உச்சுக்கொட்டிக் கடப்பதைத் தவிர்த்து வேறு எதுவும் செய்ய முடியாதது ஏன்? தொடங்கியது ஹமாஸ் என்பதால் பாலஸ்தீனர்கள் அழிவது நியாயம் என்றால், பிரச்சினையின் தொடக்கம் இஸ்ரேல் அல்லவா? போர் தொடங்கிய மறுநாளே இந்தியா, நான் இஸ்ரேலின் பக்கம் என்று அறிவித்தது. அமெரிக்காவைக் கேட்கவே வேண்டாம். ஹமாஸைத் தீவிரவாத இயக்கம் என்று குறிப்பிடும் அனைத்துத் தேசங்களும் இஸ்ரேலுக்கு ஆதரவுக் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டன. ஹமாஸ் ஒரு போராளி இயக்கம் என்று கருதுகிற தேசங்கள் 'மௌனத்தில் விளையாடும் மனச்சாட்சியே' என்று பாடிக்கொண்டிருக்கின்றன. பகிரங்கமாக சிரியாவும், ஈரானும், மறைமுகமாக ரஷ்யாவும் ஹமாஸின் பக்கம் நிற்கின்றன. இந்த எதிர்ப்பு, ஆதரவுத் தரப்புகள் இனி பலவாறாக மாறவும் கூடும். நவீன கால அரசியல் என்பது நாணயங்களால் நெய்யப்பட்டு, நியாயங்களால் அலங்கரிக்கப்படுவது. எல்லாம் தெரிந்ததுதான். எங்கும் உள்ளதுதான். உண்மையில் பாதிக்கப்பட்ட தரப்பைச் சொல்லத்தான் உருப்படிகள் தேறுவதில்லை. ஆனால், ஹமாஸ் குறித்தும், காஸா தொடர்பானதுமான குறைந்தபட்சப் புரிதலையேனும் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

### அபகரிக்கப்பட்ட நிலங்கள்

1967இல் இஸ்ரேலுக்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் இடையில் போர் வெடித்தது. சிரியாவிடமிருந்து கோலன் குன்றுகள், ஜோர்டானிலிருந்து மேற்குக் கரை (கிழக்கு ஜெருசேலம் பகுதிகளும்), எகிப்திடமிருந்து காஸா முனை, சினாய் தீபகற்பம் ஆகியவற்றை இஸ்ரேல் அப்போரில் கைப்பற்றியது. மத்தியக் கிழக்கின் வரைபடத்தைத் திருத்தியமைத்தது அந்தப் போர். பலஸ்தீனர்கள் சிறுவயதில் சுற்றித் திரிந்த இடங்களும் அவர்களின் உறவினர்களும் நண்பர்களும் வாழ்ந்துவந்த பகுதிகளும் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டன. ஆனால், ஏன் இஸ்ரேலின் குரல் மட்டும் சர்வதேச அரங்கில் ஓங்கி ஒலிக்கிறது? பலஸ்தீனத்தால் தனது தரப்பென்று ஒன்றை ஏன் உருவாக்கிக்கொள்ளவே முடியவில்லை? பலஸ்தீனர்கள் என்றல்ல, பொதுவாகவே இஸ்லாம், இஸ்லாமியர்கள் குறித்தும் மேற்குலகுக்கு முற்றிலும் தவறான புரிதல் மட்டுமே இருந்தது. 'இஸ்லாம் பிற்போக்கான மதம். கீழை நாடுகள் நாகரிகமற்றவை. மேலை நாடுகள் நாகரிகமானவை' இதுதான் அவர்களுடைய உலகப் பார்வை. அவர்களின் இலக்கியப் பிரதிகளிலும் வரலாற்று நூல்களிலும் பயணக் குறிப்புகளிலும் இப்படித்தான் எழுதப்பட்டிருந்தன. இந்தப் புரிதலின் அடிப்படையில்தான் காலணியாதிக்கம் பிறந்தது. பிற்போக்கான அரபு நிலங்களை இஸ்ரேலியர்கள் ஆக்கிரமிப்பதில் தவறில்லை எனும் கருத்து ஆதிக்கம் பெற்றது.

பலஸ்தீனப் பிரச்சினை என்பது வெறுமனே காலணியாதிக்கப் பிரச்சினையாக மட்டும் இல்லாமல் போனதற்குக் காரணம், யூதர்களின் வரலாறு. பலஸ்தீனர்களின் வலியை எம்மால் புரிந்துகொள்ள முடியாமல் போவதற்குக் காரணம், ஹிட்லரின் யூத இனவொழிப்பு நமக்குள் உருவாக்கியிருந்த [illegible] யூத இன [illegible] இஸ்ரேலின் தவறுகளை நாம் கண்டுகொள்ள மறுக்கிறோம் அல்லது தயங்குகிறோம். யூதர்களை அவர்களுடைய வரலாற்று வலி ஒன்றிணைக்கிறது.

பாலஸ்தீனர்களிடம் இல்லாத ஒரு வசீகரமான கற்பனை யூதர்களிடம் இருக்கிறது. 'இது இறைவன் எங்களுக்கு வாக்களித்து அருளிய நிலம். இதைவிட்டு நாங்கள் அகல மாட்டோம்' என்று யூதர்கள் நம்புகிறார்கள். இந்த அசாதாரணமான புனிதத்தன்மை கவசம்போல் செயற்படுவதுடன், அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. இந்தக் கற்பனைக் கதையாடல்களுக்கு மத்தியில்தான் பலஸ்தீனம் தன் தரப்பை முன்வைக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் அவர்களுடைய குரல் வெளியில் கேட்பதில்லை - கேட்பதேயில்லை.

### ஊடகங்களும் காரணம்

இஸ்ரேல் இராணுவமும் மேற்கத்தேய ஊடகங்களும் சேர்ந்துதான் இதுவரையிலான எல்லா போர்களையும் நடத்திமுடித்திருக்கின்றன. இவை இரண்டும் இல்லாததால்தான் பலஸ்தீனம் தொடர்ந்து தோற்கடிக்கப்படுகின்றது. இஸ்ரேலும் பாலஸ்தீனமும் மோதல் போக்கைக் கைவிட்டு, ஒருவரை ஒருவர் அங்கீகரித்து, மதித்து இணைந்து வாழ்வதுதான் இருவருக்குமே நீடித்த அமைதியைக் கொண்டுவரும். அதுதான் நிதர்சனமும்கூட. ஆனால், அதற்குரிய வாயில்களை அடைத்திருப்பது என்னமோ மேற்கத்தேய ஊடகங்கள்தான். பலஸ்தீனர்களின் உரிமைக்காக, காஸாவின் கௌரவத்துக்காக செயலாற்றிவரும் ஹமாஸ் குழுவினருக்கு மேற்கத்தேய ஊடகங்கள் வைத்துள்ள பெயர் 'பயங்கரவாதிகள்'. ஆதலால் இந்தப் போர் பயங்கரவாதத்துக்கு எதிரான போராக மடைமாற்றப்பட்டு எண்பிக்கவும் செய்யப்பட்டிருக்கின்றது. பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் சமரசத்துக்கு ஏது இடம்(?).

ஹமாஸை அழிப்பதாகக் கூறிக்கொள்ளும் இஸ்ரேல், அப்பாவிப் பலஸ்தீனர்கள் மத்தியில் கொத்துக்குண்டுகளை வீசியிருக்கின்றது. பொஸ்பரஸ் குண்டுகளால் தாக்கியிருக்கின்றது. பாதுகாப்பு வளையங்கள் மீது ஏவுகணைகள் பாய்ந்திருக்கின்றன. மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற நோயாளர்கள் நூற்றுக்கணக்காகக் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தனை போர்க் குற்றங்களுக்கும் மத்தியில் இஸ்ரேலுக்கு எதிராக ஒரு கண்டனக்குரல்கூட பதிவாகவில்லை என்பது எத்தனை பெரும் அபத்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து ஆற்றுகையில் சிறப்புறும் முல்லைமோடி

தருமலிங்கம் லுகிர்தா
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்



தமிழர்களினுடைய பாரம்பரியத்தை அடையாளப்படுத்துகின்ற கலைகளில் கூத்தும் ஒன்றாக விளங்குகின்றது. அந்த வகையில் கூத்து என்பது மெய்ப்பாடுகளின் வெளிப்பாடு என்று அழைக்கப்படுகின்றது. இந்தக் கூத்துக்கள் ஆரம்ப காலத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியின் மூலம் பல்வேறு முன்னேற்றகரமான செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

ஈழத்தைப் பொறுத்தவரையில் பல வகையுான கூத்து வடிவங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பிரதேசத்துக்குப் பிரதேசம் கூத்துமுறை வேறுபட்டு காணப்படும் ஈழத் தமிழரின் கூத்துகளில் ஆடல், பாடல், கதை, தாளக்கட்டுகள், ஜதிகள், வேட உடை, ஒப்பனை, பாத்திரங்களின் வருகை, அறிமுகம், ரஸ வெளிப்பாடு, முடிவு, என்பவற்றின் அடிப்படையில் கூத்துகள் இரு வகைப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் வடமோடி, தென்மோடி என்றும் வன்னியில் வடபாங்கு, தென்பாங்கு என்றும் மட்டக்களப்பில் வடமோடி, தென்மோடி என்றும் இவை அழைக்கப்படுகின்றன.

இதன் சிறப்பு பற்றி பார்க்கும்போது வடமோடி, தென்மொடி கூத்துகள் என்பன இருவகைப்பட்ட கதைகளைச் சொல்ல வல்லன. அதாவது வடமோடி கூத்து என்பதன் பொருள் யாதெனில் வீரமென பொருள்படும். அதாவது அரசர்கள் அல்லது மன்னர்களின் வீர சாகசங்களைக் கூறுவதாக இருக்கும். உதாரணமாக அவர்களின் போர், வரலாறு, புகழ் என்பவற்றை எடுத்தியம்பும் முகமாக காணப்படும். இதில் பயன்படுத்தப்படும் முடி, வாள் போன்றன பெரிதாகவும், பாரம் கூடியதாகவும் காணப்படும்.

இதேபோன்று தென்மோடிக் கூத்து என்று பார்க்கும்போது, இதில் சிருங்கார உணர்வு மேலோங்கிக் காணப்படும். அதாவது காதல் கலந்த உணர்வை அதிகம் வெளிப்படுத்தியிருக்கும். இளவரசன், இளவரசிக்கு இடையிலான காதல் மற்றும் இளவரசனின் பிரிவால் இளவர.. உடல் நலிவுற்றுக்கிடத்தல் என்பவற்றைக் குறிக்கும். இதில் பயன்படுத்தப்படுகின்ற வேட உடை, ஒப்பனை அனைத்தும் பாரம் குறைந்ததாகக் காணப்படும்.

இதேபோன்று யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் காத்தவராயன் கூத்துகள் பற்றி பார்ப்போமானால், இது யாழ்ப்பாணத்தில் சிறப்பாகவும் வட பிராந்தியத்தில் பொதுவாகவும் ஆடப்பட்டு வருகின்றது. மாரியம்மன் வழிபாட்டோடும், காத்தவராயன் வழிபாட்டோடும் தொடர்புடைய சடங்கின் வழிபாடாக கூத்து கள் காணப்படுகின்றன. இதனுடைய அரங்கமானது நீள் சதுரமான மேடையாகக் கொண்டு காணப்படும். திறந்த வெளியிலே உயர்த்தப்பட்ட மேடை, பின்புறம் ஒரு திரையும் கொண்டதாகக் காணப்படும். மூன்று பக்கங்களிலும் இருந்து பார்வையாளர்கள் பார்க்கக்கூடியதாக இருக்கும். சிவன், பார்வதி, காத்தவராயன் மாரியம்மன், பறையன், சின்னான் போன்ற பாத்திரங்கள் காணப்படும்.

மன்னாரில் ஆடப்படும் வடபங்கு, தென்பங்கு பேரன்ற கூத்துகள் பற்றி நோக்குவோமானால், மன்னார் நாடகங்களை 'வாசகப்பா' என்று அழைக்கின்ற மரபு காணப்படுகிறது. வாசகப்பாவினை ஒரு இரா கதை எனவும், இரண்டாவது மற்றும் மூன்றாவது கதை எனவும் அழைக்கப்படுகிறது. வடபாங்கில் கடவுளை வாழ்த்தும் தென்பாங்கில் வெண்பாவும், விருத்தங்களும் காணப்படும். வடபாங்கில் கடவுளைப் பற்றி பாடுகின்ற கதை சுருக்கமாகக் காணப்படும். வடபாங்கில் பாடல் மேலோசையாகவும், தென்பாங்கில் வயலோசை உடையதாகவும் காணப்படும்.

யாழ்ப்பாண, வடமராட்சி கூத்து பாரம்பரியங்களில் 'நாட்டை' என்கின்ற கூத்து வடிவமும் காணப்புடுகின்றது. வடமராட்சி சலவைத் தொழிலாளர்களால் இந்தக் கூத்தானது ஆடப்படுகின்றது. இதனை புழுதிக்கூத்து எனவும் அழைப்பர். அரங்க அமைப்பானது முன்பக்கம் பார்ப்போரைக் கொண்டதான சமதரையாகக் காணப்படுகின்றது. மேலும் ஆரம்ப காலங்களில் கூத்தானது வட்ட வடிவமாக மேடை உயர்த்தி வட்டக்களரி அமைப்பு முறையில் காணப்படுகிறது.

இந்தக் கூத்துகள் மாலை முதல் காலை வரை இடம் பெறும். மலையகத்தில் ஆடப்படும் கூத்துகளின் சிறப்புகள் பற்றி நோக்கும் போது இங்கே காமன் கூத்து, அர்ஜுனன் தபசு, பொன்னர் சங்கர் போன்ற சிறப்பான கூத்து வகைகள் காணப்படுகின்றன. இவற்றுள் காமன் கூத்து என்பது மாசி மாதத்தில் ஆடப்படும் கூத்து வகையாகும்.

முல்லைமோடி எனும் கோவலன் கூத்தானது வன்னி பெருநிலப் பரப்பின் முல்லைதீவு மாவட்டத்துக்கே உரிய தனித்துவமான கூத்தாகும். இது கோவலன், கண்ணகியுடைய கதையை சித்திரித்துக் கூறுவதாக அமைகின்றது. இந்தக் கூத்து இந்தப் பிரதேசத்தைத் தவிர வேறெங்கும் இல்லை. ஆட்ட முறை, தாளக்கட்டு, ஆடை அணிகலன்கள், ஒப்பனை என அனைத்துமே தனித்துவ்மாக உள்ளது.

ஏனைய கூத்துகளை விட அதிகமான தாளக்கட்டுக்களும் உள்ளன. ஒரு கூத்தில் பெரும்பாலும் 48 வரையான ஆடல் வகையும் மெட்டுக்களும் உள்ளன. ஆனால் முல்லைமோடியில் ஒரு பாத்திரத்துக்கு ஒரு தாளக்கட்டு என்றவாறாக அதிகமான தாளக்கட்டுக்களையும் மெட்டுக்களையும் கொண்டுள்ளது. பேராசிரியர் முல்லைமணி என்பவரே இக்கூத்துக்கு 'முல்லைமோடி' என்ற பெயரை கொண்டுவந்தவராவார்.

இக்கோவலன் கூத்தானது இற்றைக்கு நூறு வருடங்களுக்கு மேலாக ஆடப்பட்டு வருகின்றது. இந்தக் கூத்தின் ஆரம்ப அண்ணாவியார் மாணிக்க அண்ணாவியார் ஆவார். இந்தக் கூத்து முதன் முதலில் முல்லைத்தீவு, கல்லப்பாடு என்ற இடத்தில்தான் ஆடப்பட்டது. தற்போது இக்கூத்து 4ஆவது தலைமுறையில் உள்ளது. இப்போது முல்லைத்தீவு - முள்ளியவளையில் அதிக பிரபலம் பெற்ற இக்கூத்தின் ஆடல் வடிவங்கள் அப்பிரதேச மக்களுக்கு நன்றாகவே தெரிந்துள்ளது.

இக்கூத்து இன்று வரை எவ்வித நவீனமயமும் படுத்தப்படவில்லை வட்டக்களரியில் கூத்தானது ஆடப்படுகின்றது. விரதம் இருந்து கும்பம் வைத்து இக்கூத்து சடங்கு முறையில் ஆடப்படுகிறது. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய திருவிழாவில் காப்பு கட்டுதல் எனும் நிகழ்வுடன் இக்கூத்து ஆலயத்தில் தொடங்குகிறது. இக்கூத்து ஆடப்படாவிடில் அங்குள்ள மக்களுக்கு அம்மனின் கோபத்தால் பெரியம்மை, சின்னம்மை போன்ற நோய்கள் ஏற்படும் என்ற ஒரு சமய நம்பிக்கையும் காணப்படுகிறது.

தின் பக்க வாத்தியமாக மத்தளம், ஆர்மேனியம் போன்றவை காணப்படுகின்றன. முல்லைத்தீவு, முள்ளியவளை பிரதேசத்தைச் சேர்ந்த அண்ணாவியார் எம்.எஸ்.மணியம் என்பவரால் இக் கலையானது வளர்க்கப்படுகிறது. இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும் முல்லை மோடி கதையும் முற்றிலும் வேறுபட்டதாக உள்ளன.

ஆனால், சிலப்பதிகார கதை உண்மையா அல்லது முல்லை மோடி கதை உண்மையா என்பது ஆய்வுக்கு உரிய விடயம் ஆகும். உதாரணமாக சிலப்பதிகாரத்தில் பாண்டியன் தன் தவறை ஒப்புக்கொண்டு இறக்கின்றான். ஆனால், இந்த முல்லை மோடி கதையில் பாண்டிய மன்னன் கடைசிவரை தன் தவறை ஒப்புக்கொள்வதே இல்லை. இந்தக் கூத்தில் 39 பாத்திரங்கள் உள்ளன, சில பாத்திரங்கள் பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்பட்டு வருகின்றன.

ஈழத்தில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, மலையகம் ஆகிய இடங்களில் எல்லாம் இம்மரபுக்கலை கூத்துகள் இன்றும் வழக்கில் உள்ளன. பிரதேசத்துக்குப் பிரதேசம் சில வேறுபாடுகள் காணப்பட்டாலும் இவை அனைத்தும் ஓரிடத்தில் உருவாகி பின்னர் ஈழத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களில் பரவின என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. இம் மரபு வழிக்கூத்துக்களே ஈழத்து நாடக மரபின் ஆரம்பமாகும். ஈழத்தில் 200க்கும் மேற்பட்ட மரபு வழி கூத்துகள் ஆடப்பட்டதாக அறிய முடிகின்றது. எனினும் அவற்றில் இன்று பாதியை மட்டுமே எங்களால் காணக்கூடியதாக உள்ளது. ஈழத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் கூத்துகள் இருந்துள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது. பல கூத்துகள் ஆடப்பட்டிருந்தாலும் சில கூத்துகள் அச்சிலே நூலுருப் பெற்று பதிப்பாக வெளிவந்துள்ளன.


இலைமறை காயாக இருக்கின்ற எல்லா வகையான நாட்டார் கலை வடிவங்களும் எமது நாட்டுக்கே சிறப்பானவைகளாகும். நுணுக்கமான தாளக்கட்டுகள், சிறப்பான ஒப்பனைகள், வேட உடைகள், கலைஞர்களின் ஆளுமை திறன்கள் என்பவற்றின் மூலம் இந்தப் பாரம்பரிய கலைகள் சீரும் சிறப்புமாக ஊடுகடத்தப்படவேண்டும்.



சைவப்புலவர் சு. செல்லத்துரை அதிபர் ஞாபகார்த்தமாக அண்மையில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் 'கண்ணகி வழக்குரை' இலக்கிய நாடகத்தில் நடேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்றனர்.

(மயூதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களை இழந்த பூமியில் மலியும் உளநெருக்கீட்டு வன்முறைகள்

கே.எஸ் சிவஞானராஜா

போர் நடைபெற்ற காலத்திலிருந்து இன்று வரை இலங்கை வாழ் மக்கள், சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்ற செய்தியை, ஊடகங்கள் வாயிலாகத் தினம் தினம் பார்த்துக் கண்ணீர் வடிக்கின்றோம். ஒன்றாயிருந்த வாழ்க்கைமுறை. இடம்பெயர்வின் காரணமாகச் சிதறிப்போய் பதறுமளவுக்கு, வீடு, குடும்பம், உறவினர், அயலவர், கிராமங்கள் என நாடு வரைக்கும், பல் வரைக்கும் நெருக்கீடுகளால் வன்முறைக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் விவாகரத்துக்களுக்கும், தற்கொலைகளுக்கும், பலதார மணங்களுக்கும், ஏமாற்றுப்பேர் வழிகளுக்கும் பஞ்சமாபாதகங்களுக்கும், விபத்து களுக்கும், விபச்சாரங்களுக்கும், நோய்களுக்கும், மரணங்களுக்கும், பாடசாலை இடைவிலகலுக்கும், அடாவடிகளுக்கும், போதைப் பாவனைகளுக்கும், காணாமல் ஆக்குதலுக்கும், ஆன்மீக கொள்ளையடிப்புக்கும் மதமாற்றங்களுக்கும், அதிபர், ஆசிரிய மாணவர் விரிசல்களுக்கும், ஓரினச் சேர்க்கையாளர்களுக்கும், அள்ளுகொள்ளை வியாபாரத்துக்கும், விவாகாரத்துக்கும், சிசுகொலைகளுக்கும் வழிகோலியுள்ளது.

சுமார் பதினைந்து இலட்சம் அரச ஊழியர்கள், போதியளவு மத குருமார்கள், முப்படைகள், பத்தாயிரம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், இருநூற்றி இருபத்தைந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஆலயங்கள் ,ஊருக்குப் பெரியவர்கள், உளவியலாளர்கள், புத்திஜீவிகள், நிலப்பரப்புகள், மேடைவிரும்பிகள் என சகல வரப்பிரசாதனங்கள் அத்தனை இருந்தும், இதைவிட இலட்சோப இலட்சங்கள் ஆன்மீக வாலாய விற்பன்னர்களாக ஆலயங்களையே மொய்ப்பவர்களாக இருந்தும் நாடும், வீடும், காடும் இனி மேல் இல்லாதவாறு தோற்றுப்போயுள்ளது. காரணம் 85 வீதமானோர் தத்தமது பொறுப்பான கடமைகளைச் சிரவர ஆற்றுவதில்லை 15 வீதமான அரச ஊழியர்களே பொறுப்பையுணர்ந்து பொறுப்போடு வேலை செய்கிறார்கள். இதனால் இரண்டே கால் கோடி மக்களுக்கு அரச பணிகள் அவரவர் வாழ்வில் பட்டும்படாமலும் தவறுவதாகவே கருதவும் கண்டிக்கவும் முடிகிறது.

பட்டம், பதவி, பாராட்டு, பணம் எல்லாமே பரபரப்புக்கும், கதிரைக்கும், படாடோபத்துக்கும், பாஷாங்கு பாவனைக்கும், போலிவாழ்வுக்குமே பயன்படுகிறதே என்ற எண்ணம் பூமியில் தோன்றியே விட்டது.

இது உண்மையும் கூட. மாடி மனை, கோடிப்பணம், தேடிய வாழ்வு, மூடிய நிர்வாகம், ஓடிய கணக்குகள், கூடிய உறவுகள் எல்லாமே சோபையிழந்து சோதனைகளுடனும், வேதனைகளுடனுமே காணப்படுகின்றன. தூயகரங்கள் எனப் பயபக்தியானவர்களாக ஒருசிலரைத் தவிர பலரைக்காண முடியவில்லையே என என்மனம் கதறி அழுகிறது.

அரச பணியும் அரச பணமும், ஆன்மீகப் பொறுப்பும் அரசியல் வாழ்வும், இல்லறத்தொய்வும் உள்ளகப் பாங்கும், தலைமைகளுக்கு தலைமைகளும், காடுடைய சுடலைப்பொடி பூசிய உள்ளம் கவர் கள்வனைக் கருதாமையினால், அக்கிரமங்கள் அநியாயங்கள் ஆக்கிரமிப்புகள், அடிதடி, மடிபிடி, வடிகுடி, எடுபிடி, நிதிஅடி, யாவுமே வீட்டுக்குள்ளேயும், வீதிக்குள்ளேயும், நாட்டுக்குள்ளேயும் தொற்றிக் கொண்டுள்ளது. சகல துன்பத்துக்கும் மூலகாரணம் ஆசையே.

இலங்கையில் பலருடைய இல்லறம் இனிக்காது கசந்துள்ளது. கணவன், மனைவி, பிள்ளைகள் உறவு வலுவிழந்துள்ளது. வறுமையோ பல குடும்பங்களை சித்திரவதைக்குள்ளாக்கியுள்ளது. பொறுமை, போலிகளை உருவாக்கியுள்ளது. காமம், மோகம், காதல், கவர்ச்சி, சினிமா, கட்டியணைப்பு, முத்தங்கள், தொடுகை ஆறாத இன்பம், தீராத உறவு, ஓயாத போதை, ஆடம்பரம் இல்லாத வருமானம், பொல்லாத பணம், போலிக் கவர்ச்சிகள் ஜனரஞ்சகமான கதிரைகள், முதுமையிலும் இளமை, ஆன்மீகத்திலும் அரசியலிலும் ஆணவம் இவையாவுமே சகல வன்முறைகளுக்கும் ஏதுவாக அமைந்துள்ளன.

மேலும் சகல பொருளாதார நெருக்கடிகளும், கடமைகளில் நேருகின்ற அழுத்தங்களும், கணவன் மனைவிக்கிடையிலான இடைவெளிகளும், செலுத்தமுடியாத கடன் தொல்லைகளும், பல தாரப்பட்ட நாட்டங்களும், பிரம்மனை நயத்தலும், பதிவில்லாத பல திருமணங்களும், மது, மாது, போதை, போலி வாழ்வுப் பாவனைகளும் யாவும் சேர்ந்து ஒன்றாகி,கருவிலிருந்து வளர்ந்துவரும் பிள்ளைகள் வரை வன்முறைகளுக்கு இரையாகி விடுகிறார்கள்.

அண்மையில்கூட முகநூலில் பிள்ளைகள் பெற்றோரால் வதைபடும் காட்சி வெளியாகிய நிலையில், பொறுப்பானவர்களின் கடமை இறைவனால் எச்சரிக்கை செய்யப்படும் என்பதில் நாம் அதீத நம்பிக்கை கொண்டுள்ளோம். கதிரைகள் ஜனரஞ்சகமாகவும், பொறுப்பற்றும், காலம் கழிப்பவராகவும் மிளிர்வதனால் இந்த நாடு புண்பட்டு போயுள்ளது. இயற்கை தண்டனை வழங்கியே தீரும். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தொடர்பாகவும், பரீட்சைகளில் தோல்வியடைந்த மாணவர்களாகிய சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள், இடைவிலகிய சுமார் 35 ஆயிரம் மாணவர்கள், துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்கள், மாணவர்கள் அல்லாத வளர்ந்த பெண்களுக்கு நிகழ்ந்து வரும் ஆபத்துகள் தொடர்பாகவும் தினம் தினம் வீட்டுக்குள் நடைபெற்றுவரும் அடி - படி - உதை - வதை மரண வேதனையோடு மௌனிக்கும் பிஞ்சுகள் தொடர்பாகவும் நகர கிராமங்களுக்குள் ஊடுருவி விழிப்புணர்வோடு ஆற்றுப்படுத்த முடியுமான அரச இயந்திரம் இத்தனை நடந்தும் அவசர அவசிய செயற்திட்டங்களை கிராமரீதியாக, பாடசாலைரீதியாகப் பயபக்தியோடு செய்யாவிட்டால் வன்முறைகள் வீடுகள் தோறும் வாழத் தொடங்கிவிடும்.

# இரும்புப் பெண் முனீபா மசாரி

லக்ஷிகா தர்மராஜா
நுண்ணுயிரினவியலாளர்

அவள் பாகிஸ்தானின் ஒரு பாரம்பரிய குடும்பத்தைச் சேர்ந்த இஸ்லாமிய பெண். அப்பாவின் குட்டி இளவரசி. அவளுக்கு பதினெட்டு வயதாகும்போது திருமணம் செய்ய அப்பா விரும்பியதால் திருமணம் செய்து கொண்டாள். ஒருநாள் கணவருடன் மகிழுந்தில் (கார்) சென்றுகொண்டு இருந்தபோது கணவர் தூக்கக்கலக்கத்தில் மகிழுந்தைப் பள்ளத்தில்விட மகிழுந்து விபத்துக்குள்ளானது. கணவர் கதவை திறந்து குதித்துவிட அவள் மகிழுந்தின் உள்ளேயே சிக்கிக்கொண்டாள். மரணத்தின் வாயிலில் இருந்து அவள் உயிரை மட்டும் காப்பாற்றினார்கள்.

முதலில், அவள் இரண்டு கைகளும் உடைந்துவிட்டது. இனிமேல் ஓவியம் வரையும் பணியை செய்யமுடியாது என்றார்கள். அடுத்து அவளின் இரண்டு கால்களும் உடைந்துவிட்டது. இனிமேல் நடக்கவும் முடியாது. சக்கர நாற்காலிதான் பயன்படுத்த வேண்டும் என்றார்கள். பின்னர், அவளது முதுகெலும்பும் இடுப்பு எலும்புகளும் உடைந்துவிட்டதால் அவளால் இனி எப்போதுமே ஒரு குழந்தைக்குத் தாயாக முடியாது என்று சொன்னார்கள். அவளது முதுகெலும்பை சரிப்படுத்த கணிசமான அளவு டைட்டானியம் வைக்கப்பட்டது.

உலோக உடலில் வாழ்நாள் முழுவதும் சக்கர நாற்காலியில் உட்கார்ந்து எல்லாவற்றுக்கும் யாரோ ஒருவரின் உதவியை எதிர்பார்த்து வாழ்கின்ற வாழ்க்கைக்கு அவள் இருந்தே போயிருக்கலாம் அல்லவா?

இந்த அதிர்ச்சிக்கெல்லாம் அடுத்த பேரிடியாக அவள் கணவர் மணவிலக்குப் படிவத்தை அனுப்பி இருந்தார். தற்கொலை செய்து கொள்ளக்கூட கை, கால் இல்லையே என்று படுக்கையிலே அவள் அழுது கொண்டிருந்தாள். 'இதுவும் ஒருநாள் கடந்து போகும் மகளே, இறைவன் உனக்காக ஏதோ ஒரு பெரிய திட்டம் வைத்திருக்கிறான்' என்று அவள் அன்னை தைரியம் சொன்னாள். இத்தனையும் பறித்துக்கொண்ட இறைவன் ஏன் உயிரை மட்டும் விட்டு வைத்திருக்கிறான். இன்னும் ஏதோ ஒரு வேலை, ஏதோ ஒரு பயணம் மிச்சமிருக்கிறது என்று அவளுக்குத் தோன்ற ஆரம்பித்தது.

தைரியமாக அவள் கணவருக்கு விவாகரத்து அளித்தாள். மருத்துவமனையில் அவள் அறையின் வர்ணத்தை மாற்றினாள். உடைந்த கையால் வரைய முயன்றாள். சக்கர நாற்காலியால் வெளியே போய்வர முடியும் தானே என்று மனதை தேற்றி கொண்டாள். குழந்தையைப் பெற்றுக்கொள்ள முடியாவிட்டால் தத்து எடுத்துக் கொள்ளலாம் என தன்னை தேற்றிக்கொண்டாள். எழுத ஆரம்பித்தாள், பாட ஆரம்பித்தாள், பேச ஆரம்பித்தாள்! மேடைப்பேச்சாளி ஆனாள்!

இறைவன் உயிரோடு வைத்திருந்ததின் காரணம் கொஞ்சம் கொஞ்சமாக புரிய ஆரம்பித்தது! இரண்டரை மாத மருத்துவமனைக் கட்டில் வாழ்க்கை, இரண்டரை வருட வீட்டில் படுத்த படுக்கை என எழும்பவே முடியாத பள்ளத்தில் இருந்து எப்படி எழுந்து வந்தாள் என்ற அவளது கதையையே எல்லோரிடமும் சொல்லத்தொடங்கினாள்.

துள்ளித்திரிந்த அவள் எப்படி சக்கர நாற்காலியை ஏற்றுக்கொண்டாள் என்பதை கூறும்போதெல்லாம் எப்படி முடிந்தது என்று எல்லோருமே ஆச்சரியப்பட்டார்கள்.

மணவிலக்கு பெற்ற ஒரு பெண்ணாக தாய்மை அடைய முடியாத ஒரு பெண்ணாக அவள் கடந்து வந்த பாதை மக்களுக்கு ஒரு நம்பிக்கையை கொடுத்தது. சக்கர நாற்காலியில் அமர்ந்து, நகர்ந்து நகர்ந்து மேடைகளிலும் பேச ஆரம்பித்தாள். அவள் கதை பரிதாபத்துக்குரியதாக இருந்தாலும் பலரை உத்வேகப்படுத்தியது.

அவள் கதையைக் கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டார்கள். அவள் கதையே அவளை ஒரு மேடைப்பேச்சாளராக மாற்றியது. பாகிஸ்தான் தேசிய தொலைக்காட்சித் தொகுப்பாளராக இணைத்துக்கொண்டது. அவள் நாட்டைக் கடந்து உலகம் முழுவதும் பிரபலம் ஆனாள். ஐ.நா. பெண்களுக்கான பாகிஸ்தானின் தேசிய தூதுவர் ஆனாள். பி.பி.ஸி. போர்ப்ஸ் என பாகிஸ்தானின் பலத்த குரலாக மாறினாள்.

இவள்தான் டைட்டானியம் உலோகத்தகடுகள் பொருத்தப்பட்டதால் மக்களால் பாகிஸ்தானின் 'இரும்புப்பெண்' என அழைக்கப்படும் முனீபா மசாரி.

இவ்வளவு கொடுக்க நினைக்கும் இறைவன் எவ்வாறு முனீபா மசாரியை இறக்க விடுவார்?

இழப்பின் குறியீடுகள் பின்தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். முனீபா மசாரியைப் போல ஒருபோதும் உங்களை முந்த அனுமதியாதீர்கள். இறப்பு எல்லாருக்கும் பொதுவானது.. ஒருநாள் வந்தேதீரும். அதற்குமுன் தன்னம்பிக்கை இழந்து சாக முடிவு செய்யாதீர்கள்.



தோற்றுப்போனதாய் நினைத்துவிட்டாலே செத்துவிட்டதாய் அர்த்தம். முனீபா மசாரி சாக விரும்பவில்லை அல்லவா? பலருக்கு முன்னோடியாக இருக்கிறார் அல்லவா? ஆகவே நீங்களும் சாகாதீர்கள்!

தோற்றுப்போகும் போதெல்லாம் இந்த இரும்புப்பெண் முனீபா மசாரியை நினைத்துக்கொள்ளுங்கள்! முனீபா மசாரியின் அம்மா கூறிய 'இதுவும் கடந்து போகும்' என்பது என்றும் நினைவில் இருக்கட்டும்.

இது உத்வேக உரை ஆற்றும், பாகிஸ்தான் நாட்டின் ஒரு பேச்சாளரான முனீபா மசாரி அவர்களின் சுருக்கமான சுய சரிதை. இவர் ஒரு ஓவியர், மேடைப் பேச்சாளர், தொகுப்பாளர், ஆர்வலர் என எண்ணிலடங்காத திறமைகளைத் தன்னகத்தே கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
20
01
1950



மறைவு
30
10
2023

## செபஸ்ரினா உதயகாந்தராஜா

பாஷையூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரினா உதயகாந்தராஜா அவர்கள் 30.10.2023 திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம் திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகரெட்ணம் சிவராணியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், உதயகாந்தராஜாவின் அன்பு மனைவியும், ஷபினா (ஆசிரியர் வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு தாயாரும், வாசுதீசன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு) அவர்களின் அன்பு மாமியாரும், பிரான்சிஸ்கா (அன்னமலர்) காலஞ்சென்ற றொபேட் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வேலாயுபிள்ளை, சரோஜாதேவி, சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான றஞ்சிதமலர், யோகநாதன், பிலிப் (சின்ராசா) மற்றும் பிறேமா ஆகியோரின் அன்பு மைத்துனியும், லக்ஸ்மாலா அல்போன்ஸ், பிறியோலா ராஜ்குமார், றெனோலா பெலிக்ஸ், றெக்ஷலா ஜெயக்குமார் ஆகியோரின் பெரிய தாயாரும், ஜெனிபேட், ஒஸ்பேட், சாந்தனா, ஏஞ்சலின் ஆகியோரின் அத்தையும், ஜெலா, லக்ஷிகன், வலன்றினா, அன்றினா, ஜோயல், தரணிகா, ஜெஷானா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.11.2023) புதன்கிழமை பி.ப 3.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

இல.38,3ம் குறுக்குத்தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

(CS 26767) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
12
02
1946



மறைவு
28
10
2023

## நாகலிங்கம் கணேசு

(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கணேசு அவர்கள் கடந்த 28.10.2023 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் V.S கணபதிப்பிள்ளை - பத்மாவதி தம்பதியினரின் அன்பு மருமகனும் பாலரூபியின் அன்புக் கணவரும் தேவகி (நோர்வே), பகிரதி, கமலதாசன் (நன்நடத்தை உத்தியோகத்தர் பருத்தித்துறை நீதி நிர்வாக பிரிவு), உஷாந்தினி (ஆசிரியர்-யா/ மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விக்னதாசன் (நோர்வே), கார்த்திகா (தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை), சுதாகரன் (ஆசிரியர்- யா/ வண். ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரவீன், பிரித்தா, தருண்ஜன், கவிஷ்ணா, அபிரன், ஆதுரி ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர்களான நல்லம்மா, குணசிங்கம், நாகேஸ்வரி மற்றும் பராசக்தி, தேவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2023) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முதலியார் கனகசபை வீதி, 077 601 2996
மானிப்பாய். 021 225 6550

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26768) A-1

## பெண் வேலையாள் தேவை

யாழ் நகரிலுள்ள Flower Shop ஒன்றிற்கு பெண் வேலையாள் தேவை. 18-25 வயது விரும்பத்தக்கது.

தொடர்பு: 074 147 2445

## CAR for SALE

TOYOTO AXIO CAW---- HYBRID MODEL 2016, Registration 2017, 49000 km 2nd Owner, White Colour, Good Condition. Accident free vehicle, Home use vehicle.

Contact No:- 077 844 5944

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
### பொதுச்சந்தைகள், மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் 2024 ஆம் ஆண்டிற்கு (01.01.2024 - 31.12.2024) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி | : | 01.11.2023 – 14.11.2023 நண்பகல்12.00 மணி வரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | : | 14.11.2023 பி.ப 02.00 மணி வரை |
| கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | : | 14.11.2023 செவ்வாய்க்கிழமை பி.ப 02.00 மணி |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | : | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர் |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு** மூலப்பிரதியை **"செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கும் எதிர்வரும் 14.11.2023 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | 2024 மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மாதாந்த வாடகை | 2024 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 1 | அச்சுவேலி பொதுச்சந்தை | 1,000.00 | 50,000.00 | | 11,074,213.00 |
| 2 | அச்சுவேலி பொதுச்சந்தையின் உட்புற வாகன தரிப்பிடம் | 1,000.00 | 2,000.00 | | 219,120.00 |
| 3 | அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 1,600.00 | 1,815,135.00 |
| 4 | அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 6,000.00 | 1,600.00 | 1,102,530.00 |
| 5 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | | 251,880.00 |
| 6 | வளலாய் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 250.00 | 288,190.00 |
| 7 | அக்கரை கடற்கரையின் சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 1,000.00 | 500.00 | 68,200.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 1 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 20,000.00 | 500.00 | 3,489,200.00 |
| 2 | புத்தூர் பொதுச்சந்தையும் மீன்சந்தையும் (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டிடம்) | 1,000.00 | 2,000.00 | | 385,000.00 |
| 3 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 500.00 | 574,200.00 |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 1 | கோப்பாய் மீன்சந்தை | 1,000.00 | 2,000.00 | | 359,700.00 |
| 2 | கோப்பாய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 25,000.00 | 2,250.00 | 4,950,000.00 |
| 3 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 2,250.00 | 550,550.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 1 | உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 2,250.00 | 3,656,450.00 |
| 2 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 2,250.00 | 683,210.00 |
| 3 | உரும்பிராய் மத்திய சந்தை | 1,000.00 | 6,000.00 | | 1,101,100.00 |
| 4 | உரும்பிராய் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 2,250.00 | 605,550.00 |

01. சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், இறைச்சி, மரக்கறி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

02. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் சமூகமளிக்கும் போது அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதாவதொரு பிரதி (மின்சார கட்டணப்பட்டியல், வங்கிக்கணக்கு புத்தகப்பிரதி) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித்தொகை மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும். அத்துடன் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்.

04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

06. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

07. சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்களால் உற்பத்தியாளர்களினால் கொண்டு வரப்படும் உற்பத்திப்பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும். பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை, தரகுக்கட்டண அறவீடு என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

08. கேள்வி கோரும் ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமும் செலுத்தப்படவேண்டும்.

09. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களை பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

10. வாகனத்தரிப்பிடம் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக எதனையும் அறவிடக்கூடாது.

11. சபையின் அச்சுவேலி கொல்களத்தினை ஆடு, மாடு இறைச்சிக்கடைகளின் குத்தகைதாரர்கள் பாவனைக்குட்படுத்த அனுமதி வழங்கப்படும். மேலும் கொல்களப்பாவனை தொடர்பில் சபையினது அறிவுறுத்தல்களிற்கு குத்தகைதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**இராமலிங்கம் பகீரதன்**
செயலாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2023.11.01

(cr.40879) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணவீக்கம் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 1
இலங்கையில் மீண்டும் பணவீக்கம் அதிகரித்து வருகின்றது என்று மக்கள்தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 1.3 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம், கடந்த மாதம் 1.5 சதவீதமாக அதிகரித்துள்ளது. உணவுப் பணவீக்கம் மாறாமல் தொடர்ந்து 5.2 சதவீதமாகக் காணப்படுகிறது. (அ-ம)


## பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் - 2023

01. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021 ஆம் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019, ஆம் திகதிய 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆம் திகதிய மற்றும் 04/2016(iv) ஆம் இலக்க 09.02.2023 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில்இ நிஉமாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது: மேலதிக தகவல்கள் **தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம்** பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : **valiwestps@gmail.com**) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் **இடத்தில் 01.11.2023 ஆம் திகதியிலிருந்து 15.11.2023 ஆம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000 (வரி நீங்கலாக)** இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 16.11.2023 **ஆம் திகதி பி.ப 02.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அலலது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| தொ. இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (VAT நீங்கலாக) (Mn) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம். | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திக்தி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| சபைநிதி பராமரிப்பு வேலை கட்டம் III | | | | | | | | |
| 01 | சங்கானை பகுதி வீதிகள் புனரமைப்பு (தேவாலய வீதி, மமுவை வீதி) NP/14/41(17)/02/CF/01/Cha/2023 stage III | 2,565 Mn | 30 நாட்கள் | C9,C8 & C7 வீதி புனரமைப்பு | 63 நாட்கள் | 18.01.2024 | 26,000.00 | 15.02.2024 |
| 02 | வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் புனரமைப்பு (பச்சந்தை வீதி, சங்கரத்தை வீதி முதலாம் ஒழுங்கைசித்தங்கேணி பிள்ளையார் கோவில் வீதி). NP/14/41(17)/02/CF/02/ Vaddu-2023 stage III | 1,870 Mn | 30 நாட்கள் | C9&,C8 வீதி புனரமைப்பு | 49 நாட்கள் | 04.01.2024 | 19,000.00 | 01.02.2024 |
| 03 | சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு (மூளாய் தேவாலய வீதி விக்டோரியாக் கல்லூரி முன் வீதி, ஆறுமுக வித்தியாலய வீதி, கண்டாமை வீதி,சத்தியக்காட்டு வீதி, மெய்கண்டான் பாடசாலை வீதி) NP/14/41(17)/02/CF/03/Chu/ 2023 stage III | 4.180 Mn | 30 நாட்கள் | C9,C8 & C7 வீதி புனரமைப்பு | 63 நாட்கள் | 18.01.2024 | 42,000.00 | 15.02.2024 |
| 04 | அராலி பகுதி வீதிகள் புனரமைப்பு (பச்சந்தை வீதி, அராலி சங்கானை வீதி 6 ஆம் ஒழுங்கை, வண்ண புலம் சிவன் கோவில் வீதி, முருகமூர்த்தி பாடசாலை வீதி) NP/14/41(17)/02/CF/04/Araly/ 2023 stage III | 1.865 Mn | 30 நாட்கள் | C9, & C8 வீதி புனரமைப்பு | 49 நாட்கள் | 04.01.2024 | 19,000.00 | 01.02.2024 |
| 05 | மதில் அமைத்தல், கொல்களம் புனரமைத்தல் - சங்கானை NP/14/41(17)/02/CF/05/ Slaughter house/2023 stage III | 1,350 Mn | 30 நாட்கள் | C9, & C8 கட்டடப் புனரமைப்பு | 49 நாட்கள் | 04.01.2024 | 14,000.00 | 01.02.2024 |

கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 07.11.2023 அன்று பி.ப.14.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**
**01.11.2023**



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திரு.ச.சுதாகரன் அவர்களின்
அன்பு மாமனார்

**நாகலிங்கம் கனேசு**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 1946.02.12 மறைவு 2023.10.28

(CS 52689)A-1

**பாடசாலைச் சமூகம்**
**யா/ வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்,**
**ஆனைக்கோட்டை.**

## மரண அறிவித்தல்



### செல்வநாயகம் உமாசங்கர்

**(Assistant Manager, afc Alliance Finance Limited ,Chankanai)**

பண்ணாகம் சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் உமாசங்கர் (Babi) நேற்றுமுன்தினம் (30.10.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் Dr. செல்வநாயகம் பத்மா தம்பதியினரின் ஏக புத்திரனும், உமாதேவி, காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதன், காலஞ்சென்ற எதிர்நாயகம் பறுவதம் தம்பதியினரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2023) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுழிபுரம் கிழக்கு,**
**சுழிபுரம்.**
(CS 52688) (AK.1)
**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 05 . 1933



இறப்பு 30 . 10 . 2023

### செல்லையா அபிமன்னராஜா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் Swiss Roggwil (BE)ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அபிமன்னராஜா கடந்த (30.10.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லையா இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும், சங்கரப்பிள்ளை கமலம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சத்திய பாமா அவர்களின் அன்புக் கணவரும், சகிலா, சாந்தி, சாமினி, சுகந்தி, சத்தியராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (03.11.2023) வெள்ளிக்கிழமை Geissbergweg 29, 4900 Langenthal. Switzerland நடைபெறும்.

**தொடர்பு:**
++ 41 76 429 7675
++ 41 76 343 6870
++ 41 77 476 3259

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 52685) (N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் அதிகரிக்கும் மோ.சைக்கிள் திருட்டுகள்

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த எட்டு மாதங்களில் 19 மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் குடாநாட்டில், குறிப்பாக நகரப் பகுதிகளில் அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள்கள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. தமது மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் தொடர்பில் உரிமையாளர்கள் மிக அவதானத்துடன் செயற்படுவதுடன், மோட்டார் சைக்கிளின் பாதுகாப்பை ஒன்றுக்கு இரண்டு தடவைகள் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்வாறு திருடப்படும் மோட்டார் சைக்கிள்கள் குற்றச்செயல்களுக்காக அதிகளவு பயன்படுத்தப்படுகின்றன - என்றனர். (அ-ம-27)

## எகிறுகிறது...

அத்துடன், இதுவரை வற்வரி அறவிடப்படாத பொருள்களுக்கும் வற்வரி விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'கடன் நிலைபேற்றுத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் வருமானத்தை அடிப்படையாகக்கொண்ட அரச நிதி உறுதிப்பாட்டுக்காக 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் வரி அதிகரிப்பு மற்றும் வளர்ச்சியுடன் கூடிய வரிக் கொள்கைகள் பல நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன் விளைவாக 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் அரச வரி வருமானம் 51 வீதத்தால் அதிகரித்துள்ளது.

எனினும், சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்ட வரி திரட்டுக்கான இலக்கு இன்னுமே பூர்த்தி செய்யப்படவில்லை. அதற்கமைய, சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்ட வகையில் வரி வருமானம் மற்றும் ஆரம்ப மீதி இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு இயலுமாகும் வகையில் தற்போது நடைமுறையிலுள்ள வற்வரி எதிர்வரும் ஜனவரி மாதம் நடைமுறைக்கு வரும் வகையில் 18 வீதமாக அதிகரிக்கப்படும்' - என்றார். (அ-ம-44)

## பெற்றோல்...

விலைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி 92 ஒக்ரேன் பெற்றோலின் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 356 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

95 ஒக்ரேன் பெற்றோலின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலையாக 423 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோ டீசலின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலையாக 356 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுப்பர் டீசலின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலையாக 431 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெயின் விலை 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலையாக 249 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## பெண்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த, சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் வளவாளராகக் கலந்துகொள்ளவிருந்த கருத்தரங்கு பல்கலைக்கழக மாணவர்களின் கடும் எதிர்ப்பையடுத்து இடைநிறுத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு கொடூரமான பாசிச அமைப்பாகும் என அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் சட்டத்தரணி சுவஸ்திகா கருத்து வெளியிட்டிருந்தார். இவரது கருத்துக்குப் பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றனர். இந்த நிலையிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் அவரது வருகைக்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததையடுத்து கருத்தரங்கு கைவிடப்பட்டது. (அ-ம-125-66-20)

## சமுர்த்தி...

முடமாவடிச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

மேற்படி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நேற்றுமுன்தினம் காலை தனது வீட்டிலிருந்து ஐந்தேகால் பவுண் நகைகள், 90 ஆயிரம் ரூபா பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த அலைபேசி என்பவற்றை தனது கைப்பைக்குள் இட்டு எடுத்துச்சென்றுள்ளார். சைக்கிளின் முன்கூடைக்குள் அந்தக் கைப்பை வைக்கப்பட்டிருந்துள்ளது. முடமாவடிச் சந்திப் பகுதியிலுள்ள கடையொன்றுக்கு முன்பாக சைக்கிளை நிறுத்திவிட்டு பொருள்களைக் கொள்வனவு செய்யச் சென்றபோது மோட்டார்சைக்கிளில் வந்த ஒருவர் அந்தக் கைப்பையை எடுத்துக்கொண்டு சென்றுள்ளார் என்று கோப்பாய் பொலிஸாரிடம் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

## மக்களை...

தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த குழுவுடன் நேற்று நடந்த கலந்துரையாடலின்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'அரச வரி நிர்வாகத்தில் எந்தவொரு மாற்றத்தையும் அரசு செய்யாதுள்ளது. வரி நிர்வாகத்தை டிஜிற்றல் மயமாக்குதல், நவீனமயமாக்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றின் மூலம் அரச வருவாயை அதிகரிக்காமலும், இவ்வாறு வரி செலுத்தாதோர் தொடர்பில் உகந்த நடவடிக்கையும், அறவீட்டையும் மேற்கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சாதாரண மக்களிடமிருந்து வரி வருவாயை அதிகரிக்கவே அரசு முற்படுகின்றது. பெறுமதி சேர் வரியை 18 சதவீதமாக அதிகரித்து சாதாரண மக்களின் வரிச்சுமையை அதிகப்படுத்துவது கீழ்த்தரமான செயலாகும்' - என்றார். (அ-ம-44)

## அடாத்தாகக்...

பெயரில் செயற்பட்டுவரும் அலுவலகத்திலிருந்து சு.க.வினரை வெளியேற்ற வேண்டும் என்று தெரிவித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பாடல் அலுவலகம் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் ஆரம்பிக்கப்பட்ட இந்த அலுவலகத்தினை விட்டு வெளியேறுமாறு உரிமையாளரால் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த நிலையில், அவர்கள் வெளியேறாததையடுத்தே இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (அ-ம-125)

## உணவுக்குப்...

வேண்டியதில்லை என்று கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி.ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உணவு உற்பத்திச் செயன்முறையை நெருக்கடியின்றி பராமரிக்கத் தேவையான பங்களிப்பை அரசாங்கம் வழங்கி வருகிறது. எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க அதிக கவனம் செலுத்தப்படும். விவசாய அமைச்சரினதும் விவசாயிகளினதும் ஒத்துழைப்போடு அரிசியில் தன்னிறைவை எட்டி மேலதிக அரிசி உற்பத்தியைப் பேண முடிந்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்று தேவையற்ற அச்சம்கொள்ளத் தேவையில்லை.

கால்நடை அமைச்சும் மக்களுக்கு தேவையான அளவு புரதத்தை வழங்கக்கூடிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. கடந்த காலத்தில், 40 வீதமான பால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. இந்தநிலையைக் கருத்திற்கொண்டு பால் உற்பத்தியை இரட்டிப்பாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். மேலும், மேய்ச்சல் தரைகளை மேம்படுத்தவும் ஊட்டச்சத்து நிலையை அதிகரிக்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்குத் தேவையான உணவை தட்டுப்பாடின்றி வழங்குவதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. பால் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, பால்மாவில் தங்கியிருக்கும் நிலையை மாற்றி அதற்குப் பதிலாக மாற்று முறைகளைப் பயன்படுத்த வேண்டும். மக்கள் மத்தியில் திரவப் பாலின் பயன்பாட்டை ஊக்குவிக்க வேண்டும். திரவப் பாலை மக்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் வகையில், நடமாடும் விற்பனை நிலையங்களைப் பயன்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. திரவப் பாலை பொதிசெய்து விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது கால்நடைத் தீவனத்தை இறக்குமதி செய்யத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார். (அ-ம)

## இன்றுமுதல்...

பதையாயிரம் பயனாளிகளுக்குரிய ஓகஸ்ட் மாத அஸ்வெசும கொடுப்பனவு இன்று வழங்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜூலை மாதக் கொடுப்பனவு ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது. ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவு இன்று வைப்பிலிடப்படும். செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவு இம்மாதத்துக்குள் வைப்பிலிடப்படும். நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யும் நிகழ்வு இம்மாதம் 6ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை இடம்பெறும். தகுதியானவர்கள் ஜூலை மாதத்திலிருந்து கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் - என்றார். (அ-ம-6)

## ஐரோப்பிய...

இன்னமும் இரத்துச் செய்யப்படாமல் இருப்பது போன்ற பல விடயங்கள் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக இலங்கையில் அதிகரித்துவரும் இனவாதப் போக்குத் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ம)

## தனியார்...

சேவையை அடுத்து, சேவை பெறுநரை ஏற்றிச்சென்ற ஓட்டோச் சாரதி மீது, தரிப்பிட சாரதிகள் தாக்குதல் மேற்கொண்ட வெறிச்செயல் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில், போதனா மருத்துவமனைக்கு முன்பாக நேற்று இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

யாழ். போதனா மருத்துவமனைக்கு அண்மையில் நின்று ஒருவர் தனியார் செயலி ஊடாக ஓட்டோ ஒன்றினை வாடகைக்கு அமர்த்தியுள்ளார். அதனையடுத்து அவரை ஏற்றுவதற்காக குறித்த ஓட்டோ அந்தப் பகுதிக்குச் சென்றுள்ளது. அதன்போது, அப்பகுதியில் தரிப்பிடத்தில் நின்று ஓட்டோச் சேவையில் ஈடுபடுவோர், தரிப்பிடத்தில் நிற்கும் தமது ஓட்டோவையே வாடகைக்கு அமர்த்த வேண்டும் என முரண்பட்டு, அங்கு வந்த ஓட்டோ மீதும் ஓட்டோச் சாரதி மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சாரதி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். நகரில் பேருந்து நிலையம், மருத்துவமனைப் பகுதி மற்றும் ரயில் நிலையம் போன்ற பகுதிகளில் நிற்கும் ஓட்டோச் சாரதிகள் தமது சேவைக்காக அதிக கட்டணங்களை அறவிட்டு வருவதாக பல்வேறு தரப்பினரும் குற்றஞ்சாட்டி வந்தனர். இந்த நிலையில், தனியார் செயலிகள் மூலமாக சில நிறுவனங்கள் மிகக்குறைந்த கட்டணத்துடன் சேவைகளை வழங்க ஆரம்பித்திருந்தன. இதனைக் குழப்பவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. (அ-ம-20-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்து இறக்குமதி மோசடி; இருவருக்கு பயணத் தடை!

கொழும்பு, நவ.1

போலி ஆவணங்களைத் தயாரித்து தரமற்ற 22 ஆயிரத்து 500 இம்யூனோகுளோபின் (Immunoglobulin) தடுப்பூசிக் குப்பிகளை இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதித்த இரண்டு உயர் அரச அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உரிமையாளருக்கு வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட் டுள்ளது.

சந்தேகநபர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தயாராக உள்ளனர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சமர்ப்பித்த பிரேரணையை அடுத்து, மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் இந்த வெளிநாட்டுப் பயணத் தடையை விதித்துள்ளது.

மருத்துவ விநியோகப் பிரிவின் பணிப்பாளர் கபில விக்ரமநாயக்க, தேசிய மருந்துக் கட்டுப்பாட்டு அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் குணசேகர மற்றும் இலங்கைக்கு இந்த மருந்துகளை இறக்குமதி செய்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜானக பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இந்த மருந்து நிறுவனம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இங்கு 130 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மோசடி இடம்பெற்றுள்ளது என்று தெரியவந்துள்ளது.

விசாரணைகள் நிறைவடையும் வரை இந்தத் தடை உத்தரவு நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப் படுகின்றது.

(எ-இ)


## வேலையாட்கள் தேவை

இல.194, யாழ்வீதி, மானிப்பாய் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பொதியிடலுக்கு பெண்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. cs52686 (AK - 1)

மேலதிக விபரங்களுக்கு : 076 640 3388

## முக்கிய ஆவணங்கள் தவறிவிட்டன

1. சாரதி அனுமதிப்பத்திரம்
2. வாகனத்தின் காப்புறுதிப் பத்திரம்
3. வாகனத்தின் வரிச் சான்றிதழ்
4. ATM Card B.O.C
5. ATM Cartd P/Bank
6. சிறுதொகைப் பணம்.

கண்டெடுத்தவர்கள் என்னிடம் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். சரசாலைக்கும் சாவகச்சேரிக்கும் இடையில்.

தொடர்பு: 077 031 0087

அமெரிக்க லொத்தர் விசா

* பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
* அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

இன்னும் 06 நாட்கள் மட்டுமே

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S. Road, Jaffna. T.P: 0777 55 45 28

## கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (cs52640 N-1)

076 573 4507

02 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

அமெரிக்க லொத்தர் இலவச விசா

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2024ல் நீங்களும் அமெரிக்காவில்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

V2 Travels

0768226244
0768226241

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள் விற்பனைக்கு உண்டு

- புறொயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ், ஊர் கோழிகள் இவை அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்.
- வியாபாரிகளுக்கும், சாப்பாட்டு கடைகளுக்கும் விலைக்கழிவு உண்டு.
- புறொயிலர் விலை 650/=
- மொத்த கொள்முதலுக்கு ரான்ஸ்போட் இலவசம்.

தொடர்பு: நியூ சிற்றி பாம்
நியூ சிற்றி கோழிக்கடை
இல.8, சின்னக்கடை மார்கற்,
குருநகர், யாழ்ப்பாணம். (CS 26773) A-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 03 . 1936



மறைவு 29 . 10 . 2023

### பரமசாமி நாகம்மா

சரசாலை வடக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், 38, யாழ்வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி நாகம்மா கடந்த (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகர் சின்னக்குட்டி தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற பரமசாமியின் பாசமிகு மனைவியும், தவமணி, காலஞ்சென்ற பத்மாவதி, லதா, பரமேஸ்வரன் (சுவிஸ்), உமாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பரமசாமியின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, முத்துவேலு, கனகம்மா, துரைராசா, மகேஸ், சிவக்கொழுந்து, கனகம்மா, துரைசிங்கம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், கதிரவேலு, தேவராசா, ரவீந்திரராஜன், சுபேந்திரன், தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காண்டீபன் (சுவிஸ்), அமரர் சங்கரதாஸ், டயானி, நிரோஜன், நிலானி, ரஜீவன், இனியவன், கிருத்திகா, அபினா, அபிஷாந் ஆகியோரின் பேர்த்தியாரும், அர்வினின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

38, யாழ்வீதி,
யாழ்ப்பாணம்.


TP : 021 222 9217
076 618 2047
075 626 3394

தகவல் :
குடும்பத்தினர்

CS 52683 (AK.1)

## மரண அறிவித்தல்

மலர்வு 01 . 09 . 1927



உதிர்வு 27 . 10 . 2023

### மாணிக்கம் தம்பிப்பிள்ளை

குமரகோட்டம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தம்பிப்பிள்ளை கடந்த (27.10.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், பொன்னையா செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் பாசமிகு கணவரும், அமரர்களான கந்தையா, அன்னமுத்து, கனகலிங்கம், ஆச்சிமுத்து, இராசலிங்கம், அப்புத்துரை, சுந்தரம்பிள்ளை, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரனும், சர்வானந்தராசா (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி, விக்னேஸ்வரன் (ஜேர்மனி), பரமராஜா (ஜேர்மனி), கிருபானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சினி (ஜேர்மனி), சாந்தகுலநாதன், கமலகுமாரி (ஜேர்மனி), ஜெயரஞ்சினி (ஜேர்மனி), ஜெயகீதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுகிபன், ஜெயாதேவி (ஜேர்மனி), சுயந்தன் (ஜேர்மனி), றினா (ஜேர்மனி), சர்மினி (ஜேர்மனி), கிரிதரன் (ஜேர்மனி), சிவதாஸ், ஜிந்துஜா, பபிதா, நிருஜன் (ஜேர்மனி), பிரணவன் (ஜேர்மனி), நிருஜா, கிருஜன் (ஜேர்மனி), ராகவி (ஜேர்மனி), மிதுரா (ஜேர்மனி), அகிசன் (ஜேர்மனி), சாய்பிரியன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசத்திற்குரிய பேரனும், நிலா அஜிதா (ஜேர்மனி), ஆதிரா (ஜேர்மனி), பைரவன் (ஜேர்மனி), லியாஸ் சந்தோஷ் (ஜேர்மனி), கீரா (ஜேர்மனி), சிபிஷன், சிபிக்ஷன், சிபிஷ்ரிகா ஆகியோரின் பூட்டப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2023) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குமரகோட்டம், கோண்டாவில்.
072 959 6292

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26768) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.